


# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org

வள்ளுவர் ஆண்டு 2053 துலை நல்லோரை ஐப்பசித் திங்கள் 21ம் நாள் (07-11-2022) நிறைமதி வெளியீடு +94 21 221 2739



## திருமூலநாயனார் குருபூசை



திருமந்திரம் தந்த திருமூல நாயனார் குருபூசை ஐப்பசி அசுபதி விண்மீன் அன்று (7-11-2022) திங்கட்கிழமை தென்னாட்டில் கொண்டாடப் படும்.

# ஐப்பசி அன்னமுழுக்கு இம்முறை 22ம் நாள் (8-11-22) செவ்வாய்க்கிழமை

# சோற்றுக்குள்ளே ஒளிந்திருக்கும் சொக்கநாதரை வழிபடும் நாள்



கல்லுள் தேரைக்கும் கருவுள் சிசுவுக்கு உணவளிக்கும் எங்கள் பரமன், உலகில் எல்லா உயிர்களைப் படைத்தும், அவைகளுக்கான உணவையும் கொடுத்தும், நாளும் காத்தும் வரும் ஈபவனாகிய ஈசனுக்கு உணவினாலே திருமுழுக்கு செய்து கொண்டாடும் விழாவே ஐப்பசி அன்னமுழுக்கு. ஐப்பசி என்ற பெயரிலே பசி என்று வருவதையும் கருத்தில்கொள்க. அத்துடன் அரிசி என்ற சொல்லிலேயே அரியும் சிவனும் அமர்ந்துவிட்டதை நீங்கள் அறிந்துகொள்ளலாம். நெல் அரிசியாகும், அரிசி சோறாகும், சோற்றுக்குப் பிறகு எதுவுமே இல்லை. அது உடம்பிலே சத்தியாகி விடும். அதைப்போலவே ஆன்மாவும் பிறப்பெடுக்கும், மீண்டும் பல உயிர்களாக பிறக்கும். பின்னர் முத்திநிலையை அடைந்தவுடன் மீண்டும் இறைவனோடு கலந்துவிடும். இந்த தத்துவத்தை எடுத்துரைக்கவே ஐப்பசி அன்னமுழுக்கு கொண்டாடப்படுகிறது என்ற கருத்தும் உண்டு.

எது எப்படி இருந்தாலும் எங்கள் பெருஞ் சமயமாகிய சைவ சமயம் அன்று முதல் இன்று வரை அடியார்களை சிவமாகப்பாவித்து அவர்களுக்கு பூசையும் வைத்து அன்னம்பாலிப்பு செய்யும் மரபினைக் கொண்டது. பசித்தவர்களுக்கு உணவளிப்பதை சைவம் வலியுறுத்தி வந்திருக்கிறது. இதனை நாங்கள் தெளிவாக புரிந்துகொள்ளவேண்டும்.

ஏழாம் நூற்றாண்டிலே தமிழ்நாட்டில் பஞ்சம் நிலவியபோது அப்பர் சுவாமிகளும், சம்பந்தர் சுவாமிகளும், சிவனிடம் படிக்காசு பெற்று மடம் அமைத்து, வந்தவர்கள் எல்லோருக்கும் தினமும் அன்ன தானம் செய்தார்கள் என்பதை மீண்டும் நினைவில் கொள்வோம்.

அந்நாளில் மழையின்மையாலும் ஆற்று நீர்ப்பெருக்கு இன்மையாலும் பஞ்சம் உண்டாயிற்று. இறைவன் ஞான சம்பந்தர் நாவுக்கரசர் கனவில் தோன்றி, **“கால வேறுபாட்டால் துன்புற வேண்டாம்”** அடியவர்க்கு உணவளிக்கும் பொருட்டுப் படிக்காசு தருகின்றோம் என்று கூறி திருக்கோயிலில் மேற்கு கிழக்குப் பீடங்களில் நாள்தோறும் படிக்காசு அளித்தார் எங்கள் சிவபெருமான். அக்காசுகளைப் பெற்று **‘சிவனடியார்கள் இருபொழுதும் எய்தி உண்க’** எனப் பறைசாற்றி அடியார்க்கு அமுதளித்தார்கள்.

இப்படி சைவம் என்றுமே மக்களின் துன்பங்களை போக்கும் நெறியையே போதிக்கிறது.ஏன் சிவனே முன்வந்து மக்களின் துன்பங்களை போக்கியுள்ளார. இவற்றினை அறியாதவர்கள் இந்துசமயப் புராணக்கதைகளை வைத்துக்கொண்டு சைவத்தமிழர் பண்பாட்டினை, மரபினை வாழ்க்கை முறையினை குறைவாக மதிப்பிடுவது அவர்களின் அறியாமையே.

இவ்விழாவானது ஐப்பசித் திங்களில் கொண்டாடப்படுகிறது. கடற்கரையை அண்டிய பகுதியில் சந்திரனை வைத்து ஐப்பசி நிறைமதி நாளன்றும், ஆற்றங்கரை அல்லது நடுநிலப்பகுதியில் ஐப்பசி அசுவினி / புரவி நாண்மீன் அன்றும் கொண்டாடப்படும். அதன்படி இம்முறை 7ம் திகதி ஆற்றுப்படுக்கை / நிலப்பகுதியில் மற்றைய இடங்களில் செவ்வாய்க்கிழமை 8ம் திகதியும் கொண்டாடப்படும்.


**திருச்சோற்றுத்துறைத் திருப்பதிகம்**

**செப்ப நெஞ்சே நெறிகொள் சிற்றின்பம்**
**துப்ப னென்னா தருளே துணையாக**
**ஒப்ப ரொப்பர் பெருமா னொளிவெண்ணீற்**
**றப்பர் சோற்றுத் துறைசென் றடைவோமே.**

**திருச்சிற்றம்பலம்.**

## திருமந்திரம் தந்த திருமூல நாயனார் குருபூசை


**“சிவனோடொக்கும் தெய்வம் தேடினும் இல்லை**
**அவனோடு ஒப்பார் இங்கு யாவரும் இல்லை**
**புவனம் கடந்தன்று பொன்னொளி மின்னும்**
**தவனச் சடைமுடி தாமரையானே”**



‘திருமூலர்’ என்ற ஒற்றை பெயர் பல ஆண்டுகளை கடந்தும் ஒளிர்ந்துகொண்டிருக்கின்றது, ஓராயிரம் உணர்ச்சி அலைகளை வீசிக்கொண்டிருக்கின்றது அதையும் தாண்டி அந்தப் பெயரை நோக்கும்பொழுது பத்தி ஒளிவீசி பரவுகின்றது. இத்தகைய பெருமைகளிற்கு காரணம், மூலனின் உடலில் அமர்ந்து திருமூலர் பாடிய அரும்பெரும் அதிசயமான ‘திருமந்திரம்’ என்று சொல்லிப் போகலாம்.

திருமூல நாயனார் சேக்கிழார் சுவாமிகளால் புகழ்ந்து பேசப்பட்ட அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரும், பதினெண் சித்தர்களுள் ஒருவரும் ஆவார். திருமூலர் வரலாற்றை நம்பியாண்டார் நம்பிகள் திருத்தொண்டர் திருவந்தாதியில் சுருக்கமாய்க் கூறுகிறார். இவர் வாழ்ந்த காலம் கி.மு 5000 வருடங்களுக்கு முந்தயது. எனினும் இவரால் அருளப்பட்ட திருமந்திரமாலை பல காலத்திற்கு பின்னரே உலகிற்கு வழங்கப்பட்டது என்பதால் தற்கால அறிஞர்கள் கி.பி என்று கூறுகின்றனர். இது 3000 பாடல்களைக் கொண்டது. இதனைச் சைவத்திருமுறை பன்னிரண்டினுள்பத்தாவதுதிருமுறையாய்த்தொகுத்துள்ளனர்.

## இலங்கையில் சைவம் வளர்த்த தனபாலன் ஐயா சிவபதம் பெற்றார்



இலங்கையில் பன்னெடுங்காலமாக சைவ சமயத்தின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்ட சிவத்திரு.கெங்காதரம்பிள்ளை தனபாலன் அவர்கள் இறைவனது பாதரவிந்தங்களில் சரணடைந்தார். சைவ மக்களின் வழிபாடுகளுக்காக வெள்ளிக்கிழமைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என வாழ்நாள் முழுவதும் குரல் கொடுத்தவர்.அத்துடன் பசுவதைக்கு எதிராக பல பிரசுரங்களை தொடர்ந்து வெளியிட்டவர்.

சைவ மக்களுக்கு அல்லது கோயில்களுக்கு ஏதும் இடையூறுகள் என்றால் உடனே நேபாள இந்து மன்னருக்கு மனு அனுப்பியவர். இவ்வாறு பல சைவப் பணிகளை இடைவிடாது தொடர்ந்து செய்துவந்த பெரியவர் ஐயா தனபாலன் அவர்கள்.

யாழ்ப்பாணம் சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும் (11-05-1949), சாவகச்சேரி நுணாவில் மத்தி, வவுனியா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் இலங்கை சைவ மக்களுக்கு அளப்பரிய பணிகளை ஆற்றி 21-10-2022 வெள்ளிக்கிழமை அன்று சிவபதம் அடைந்தார். இவரின் ஆன்மா எல்லாம்வல்ல பரம்பொருளின் பாதாரவிந்தங்களில் இளைப்பாற, தென்னாட்டில் உறையும் ஐம்பூதநாதப் பெருமானை வேண்டிக்கொள்கிறோம்.

# ஒசுத்திரேலியா சைவ மாணவர் சபை ஆரம்பம்

புலம்பெயர் ஆங்கிலம் பேசும் தமிழ் மாணவர்களிடையே சைவ சமயத்தின் கருத்துகளை விரிவடையச் செய்யவும், அதன்வழி அவர்களின் வாழ்வினைப் பண்படுத்தி மேன்மையுறச் செய்யும் நோக்குடன் ஒசுத்திரேலியாவில் சைவ மாணவர் சபை புரட்டாசித் திங்கள் 16ம் நாள் (03-10-2022) அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

ஆரம்பக்கட்டமாக ஒசுத்திரேலிய தமிழ் உயர்நிலைப் பாடசாலை மாணவர்கள் உறுப்பினர்களாக இணைத்துக் கொள்ளப்பட்டனர். மேலும் கடந்த ஆக்டொபர் 27 அன்று ஒசுத்திரேலியா சைவ மாணவர் சபை கிளையின் முதலாவது இணையவழி கந்துரையாடல் ‘அடிப்படை சைவம்’ என்ற தலைப்பில் இடம்பெற்றது. இக்கலந்துரையாடலை வைத்தியர். பிரதாபன் அவர்கள் முன்னெடுத்து நடத்தியுள்ளார்.

இச்செயற்பாடு அறம் அறக்கட்டளை மற்றும் தென்னாடு ஒசுத்தேரேலியா இணைந்து, புலம்பெயர் தேசங்களில் மாணவர்களிடையே சைவத்தை வளர்க்கும் முயற்சிக்கான விதையாகும். இவ்விதையானது பெருமரமாக வேரூன்றி நிலைபெற எங்கள் பரமன் திருவருள் புரிவாராக!

**“மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்”**

**திருச்சிற்றம்பலம்**







# கொழும்பிலும் சிவபூமியின் சிவப்பணிகள் ஆரம்பம்

அறப்பணிகள் கருவூலமாகத் திகழும் சிவபூமியானது, மன வளர்ச்சி குறைந்த பிள்ளைகளை ஆற்றுப்படுத்தவென 02-07-2004 இல் 12 பிள்ளைகளுடன், வைத்திய கலாநிதி குகதாசன் தம்பதிகளின் உறவினர்களான லீலாவதி சுப்பிரமணியம் குடும்பத்தினர் அன்பளிப்பாக வழங்கிய காணியில் கோண்டாவிலில் சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டதே ஆகும். ஆனால் இன்று சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்புக்குட்டி அவர்களின் வழி வந்த கலாநிதி. ஆறுதிருமுருகன் ஐயா அவர்களின் உடைய முனைப்பாட்டினாலே, இலங்கைத் திருநாடு முழுவதும் எண்ணற்ற சிவப்பணிகளை ஆற்றி “சிவபூமி“ என்ற சொல் அதிக பேசுபொருளாக்கியுள்ளார். சிவபூமி அமைப்பினரின் அறப்பணிகளில் நாவற்குழியில் அமைக்கப்பட்ட திருவாசக அரண்மனை ஆனது சைவத்தமிழ் மரபின் அடித்தளமாகும்.

இவ்வாறு நாடு முழுவதும் சைவம் வளர்க்கும் சிவபூமி அமைப்பினர் கொழும்பிலும் தங்களுடைய அர்ப்பணிப்பை தொடருவதற்காக, கடந்த (20-10-2022) அன்று சிவபூமி மையம் ஒன்றை கொழும்பில் திறந்து வைத்துள்ளனர். இந்நிகழ்வில் சுப்பிரமணியம் கோட்ட, தவத்திரு. ரிஷி தொண்டுநாதன் ஐயா, வேதாந்த மடத்தினுடைய வதிவிட ஆச்சாரியார் தவத்திரு. வேத வித்தியாசாகர் ஐயா, கம்பன் கழக ஜெயராஜ் ஐயா ஆகிய பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

இந்த அரிய சிவப்பணிக்காக திருமதி. திரவியம் சபாரத்தினம் அம்மையார் அவர்கள் பல கோடி பெறுமதியான தனது பம்பலப்பிட்டி வீட்டினை சிவபூமியின் சிவப்பணிக்காக தானமாக கொடுத்தார் என்பது வரலாற்றில் பதியப்படவேண்டிய விடயமாகும்.

**“சிவசிவ என்றிட சிவகதி தானே”**

**திருச்சிற்றம்பலம்**



# சுவாமி விபுலானந்த அடிகளாரின் திருவுருவச் சிலை திறப்புவிழா



யாழில் முக்கிய நெடுஞ்சாலையான யாழ் - மானிப்பாய் - காரைநகர் வீதியில், யாழ் நுழைவாயிலின் கிழக்கில், கோம்பயன் மணல் சுற்று வட்டத்தில், ஈழத்தில் சைவமும் தமிழும் வளர்த்த பெரியார் யாழ் நூல் தந்த முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் சிலை, யாழ் மாநகர சபை உறுதுணையுடன் அகில இலங்கை சைவ மகா சபையினால் நிறுவப் பெற்று, தென்கயிலை ஆதீனம் தவத்திரு அகத்தியர் அடிகளார், மாநகர முதல்வர் திரு.வி மணிவண்ணன் ஆகியோரால், கடந்த புரட்டாசித் திங்கள் 23ம் நாள் (09.10. 2022) காலை 10 மணிக்கு திறந்து வைக்கப்பட்டது.

அதே போன்று உலகின் முதல் தமிழ் பேராசிரியரான விபுலானந்தரால் தமிழ் உலகின் வெளிச்சத்திற்கு கொண்டு வரப்பட்ட புரட்சி புதுமை கவிகளிற்கு சொந்தக்காரரான மகாகவி சுப்பிரமணிய பாரதியார் சிலை, துணைவேந்தர் பேராசிரியர் சிவ. சிறிசற்குணராசா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இவர்களுடன் இணைந்து திறந்து வைப்பதில் கௌரவ யாழ் மாநகர முதல்வர் சட்டத்தரணி மணிவண்ணனும் அகில இலங்கை சைவ மகா சபைத் தலைவர் சிவத்திரு சண்முகரத்தினமும் இணைதிருந்தனர். சைவ மகா சபையினரின் இவ்வாறான முன்னெடுப்புகள் சைவத்தமிழ் பாரம்பரியத்தை நிலைநாட்டலுக்கு பெரிதும் உந்துதலாக அமைகிறது.

**“மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்”**

**திருச்சிற்றம்பலம்**



தென்னாடு
செந்தமிழாகம சிவமடம், கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

சிவத்திரு. சிவ. செந்தமிழாதன்,
ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
0715588737, aathan@thennadu.org



# திருக்கோணமலையெங்கள் மலையே!

திருஞானசம்பந்தர் யோகக் காட்சியில் உணர்ந்து, பாடிப்பரவிய திருத்தலமே திருக்கோணமாமலையில் அமைந்த திருக்கோணேச்சரம். குளக் கோட்ட மன்னன் திருப்பணி செய்து, போர்த்துக்கீசர்களால் இடித்தழிக்கப்பட்டு மீண்டும் சைவத்தமிழ் அன்பர்களால், அவர்களது அயராத உழைப்பிலே 1952ஆம் வருடம் மீளக் கட்டுமானமும் செய்யப்பட்டது. இத்திருத்தலம் ஐம்பெரும் ஈச்சரங்களில் ஒன்றாக விளங்குகின்றது. திருக்கோணேச்சரம் இன்று புதுப்பொலிவுடன் விளங்கினாலும், இத்திருத்தலம் அமைந்துள்ள சூழல் இன்று பெரும்பான்மை இனத்தவராலே, **“தொல்லியல் பூமி”** என்ற அடையாளப்படுத்தலோடு, ஆக்கிரமிக்கப்படுவதே இன்று பெரும் பேசுபொருளாகவுள்ளது!

ஆலயச் சூழலின் அமைதியைக் கெடுக்கும் விதத்தில், ஆலயத்துக்கு உரித்தான நிலப்பகுதியிலேயே பெரும்பான்மையின மக்களுக்கு நிரந்தரத் கடைத் தொகுதிகளை அமைப்பதும், புத்தரின் சிலைகளை நிறுவுவதும், ஆலய வெளி வீதியை சுற்றிவர இயலாத வண்ணம் தொல்பொருள் திணைக்களத்தினூடாக தடைகளை ஏற்படுத்துவதும், கைது நடவடிக்கைகள் ஊடாக ஆலய அறங்காவலர் சபையினரைத் தொடர்ந்தும் அச்சுறுத்துவதுமாக மேற்கொள்ளப்படும் மத அடக்குமுறைகளும், நில அபகரிப்புகளும் நிகழும் இடமாக இன்று மாறிவிட்டது திருக்கோணேச்சர ஆலயச் சூழல்!

எனினும் இன்று இராணுவத்தினரின் கட்டுப்பாட்டினுள் உள்ள போர்த்துக்கேயர்களால் அமைக்கப்பட்டதும், பிரித்தானியரால் திருத்தி அமைக்கப்பட்டதுமான **‘பிரட்ரிக்’** கோட்டை அமைந்துள்ள சுமார் முந்நூற்று ஐம்பது ஏக்கர் நிலப்பரப்பு முழுவதும் திருக்கோணேச்சர ஆலயத்துக்கு உரித்தான நிலமாகவே இருந்துள்ளமையும், அது அறுநூறு பாகம் அகலமும், எண்ணூறு பாகம் நீளமும் கொண்ட திருக்கோணச்சர திருக்கோயிலை இடித்த கற்களைக் கொண்டு அமைக்கப்பட்டமையையும் ஆங்கிலேயர் வெளியிட்ட அறிக்கைகளின் துணையோடு நாம் அறியலாம். கலாநிதி பாலேந்திரா போன்றவர்களது அயராத முயற்சியில் 1950ஆம் ஆண்டில் உருவான திருப்பணிச்சபையே இன்றைய ஆலயத்தின் தோற்றுவாய்க்கு வித்திட்டது எனலாம். **“தென் கைலாயம்”** என்று சிறப்பிக்கப்படுவதும், திருப்புகழ் பாடப்பட்டதும், குறிஞ்சி, முல்லை, நெய்தல் ஆகிய நிலங்கள் ஒரு சேர அமைந்து எழில் பகர்வதுமான திருக்கோணமாமலை பிரதேசமானது கிழங்கிலங்கையின் தமிழர்களது தலையாய இடமாகும்.

இத்தகு சிறப்பு வாய்ந்த ஆலயம், இன்று ஆக்கிரமிக்கப்பட்டும், “பாவநாச தீர்த்தம்” பாதுகாப்பு வலயமாக்கப்பட்டு அடியார்கள் நீராட முடியாத இடமாகவும், இராச கோபுரம் அமைப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டும், ஆலயச் சூழலில் அறுபதுக்கும் மேற்பட்ட நிரந்தரக் கடைத் தொகுதிகள் அமைக்கப்பட்டும், பாரபட்சமான நீதி, நாட்டின் நிர்வாகப் பீடங்களாலே, ஏற்படுத்தப்பட்டமைக்கு எதிராக சைவ அடியார்கள் ஒன்று சேர்ந்து குரல் கொடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்!

முல்லைத்தீவு குருந்தூர் மலையிலே, தொல்லியல் திணைக்களம், வனவளத் திணைக்களம், பொலீசார் முன்னிலையில் புதிதாக விகாரை அமைக்கப்படுகின்ற போது, திருக்கோணமலையிலே ஏற்கனவே ஆயிரம் ஆண்டு காலமாக இருந்த சிவாலயத்திற்கு கோபுரம் அமைக்க அனுமதி மேற்குறித்த திணைக்களங்களாலேயே மறுக்கப்படுவது கண்ணெதிரே நடக்கும் அநீதியாகும். சட்டத்தின் உதவியுடன், திருக்கோணேச்சர ஆலயத்தின் பாரம்பரிய நிலத்தை மீட்கவும், சைவசமயிகள் இவ்விடயம் குறித்து விழிப்படையச் செய்யவும் இன்று உயரியபற்றோடு போராட்டங்களை முன்னெடுத்திருக்கும், சைவ அமைப்புக்களுக்கும், அடியவர்களுக்கும் எம்மாலியன்ற ஆதரவை நாம் நல்க வேண்டும்.

பாடசாலை மட்டங்களிலும், பல்கலைக்கழக மட்டங்களிலும் மாணவர்களுக்கும் இவ்விடயம் குறித்த தெளிவுபடுத்தல்களையும், சமய உணர்வையும் ஊட்டுவதற்கு இங்குள்ள சைவப் பெரியவர்கள் ஏதேனும் ஒரு வழிவகையை ஏற்படுத்தி, அப்பொறிமுறையினூடாக ஆக்கபூர்வமான போராட்டங்களை அறவழியிலும், அறிவு வழியிலும் உந்தவேண்டும். பாராமுகமாக நாம் இருந்தால், இருக்கும் ஆலயமும் கதிர்காமம் போல் மாற்றப்படுவதற்கும், சைவசமயிகள் பத்தி செய்யும் இடமாக அன்றி, சுற்றுலாப் பயணிகளை வைத்து பெரும்பான்மை வியாபாரிகள் பணம் செய்யும் இடமாக மாற்றமடையலாம். அதை நோக்கிய பயணத்தில் அவர்கள் பாதி வெற்றியும் பெற்றுள்ளனர். இணக்கமான முறையிலும், பேச்சுவார்த்தைகளின் அடிப்படையிலும், பாரத தேசத்தின் மேற்பார்வையிலும் இவ்விடயத்தை அணுகி அறிவார்ந்த முறையில் அமைதியாகப் போராட்டத்தை முன்னெடுக்க கூடிய ஆற்றலாளர்களை சைவத் தமிழ் உலகம் இன்று எதிர்பார்த்து நிற்கின்றது என்றால் அது மிகையல்ல!

**“கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த**
**கோணமாமலை எங்கள் மலையே”**

**திருச்சிற்றம்பலம்**

தென்னாடு
செந்தமிழாகம சிவமடம், கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

சிவத்திரு.யாழவன் சிவவேதன்,
அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (70) 770 1111, sivavethan@thennadu.org



# சிந்திப்போம், செயற்படுத்துவோம்

எம்பெருமானின் திருவருட்சத்தியாகிய அம்பிகையைப் போற்றி, இன்பம், துன்பம் வாழ்க்கை என அனைத்தையும் அவளிடமே ஒப்படைத்து முழு உலகும் எம்பெருமாட்டியின் திருவருட் கடலில் மூழ்கித் திளைத்த பொற்காலமே கடந்துபோன ஒன்பானிரவு விழாங்காலங்கள். சைவசமயிகளின் வாழ்வியலில் விரதங்களும், விழாக்களும் முக்கியமானவை. விரதங்கள் வீதி போன்றன. ஒழுங்குபடுத்தப்பட்ட வாழ்வியலையும் நெறிப்படுத்தப்பட்ட பண்பாட்டையும் மக்களுக்கு வழங்கக் கூடிய ஆற்றல் படைத்தவை விரதங்கள். **“மனமானது பொறிவழிப் போகாது நிற்றற்பொருட்டு உணவை விடுத்தேனும், சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் எனும் மூன்றாலும் இறைவனை விதிப்படி மெய்யன்போடு வழிபடலே விரதம்”** என நல்லை நகர் ஆறுமுகநாவலர் பெருமான் வரைவிலக்கணம் வரைகின்றார்.

ஆறுமுக நாவலர் பெருமான் அவர்கள் திருவாய் மலர்ந்த வரைவிலக்கணத்திற்கு ஏற்ப விரதம் கடைப்பிடிக்கும் அடியாரொருவர் உணவை விடுப்பது அல்லது சுருக்குவது கட்டாயமாகிறது. அதற்கு மேலதிகமாக **‘விதிப்படி மெய்யன்போடு வழிபடல்’** எனும் சொற்களையும் நாவலர் வலியுறுத்துகின்றார். விதிப்படி என்றால் நெறிப்படுத்தப்பட்ட ஒழுங்கின்படி என்று பொருள்படும். இங்கே ஆகமம் சார்ந்து எனும் பொருண்மையின் அடிப்படையிலேயே **‘விதிப்படி’** எனும் சொல்லாடல் கையாளப்பட்டுள்ளது. மெய்யன்போடு வழிபடுகின்ற வழிபாடே பத்திநெறியாக அழைக்கப்படுகின்றது. அந்த மெய்யன்புக்குச் சமாந்தரமாய் விதிப்படியும் வழிபடுகின்ற போது அதனையே நாவலர், ‘விரதம்’ என அடையாளப்படுத்துகின்றார்.

அந்த வகையில் ஒன்பானிரவு விரதமும் சத்தியை நோக்கி மெய்யன்போடு இயற்றப்படும் வழிபாடாகவே மிளிர்கின்றது. எனினும் விரதம் என்ற சொல்லாடல் ஒன்பானிரவை முற்றுமுழுதாகக் குறித்துவிடுமா என்றால் இல்லை. சைவம் சிறந்தோங்கத் தீந்தமிழ் பாடிய மணிவாசகப் பெருமானார் திருவாசகத்திலே, **“விரதமே பரம் ஆக, வேதியரும் சரதம் ஆகவே சாத்திரம் காட்டினர்** “ என்று குறிப்பிடுகின்றார். மெய்யன்பையா? விதியொழுங்கையா? சைவம்

முதன்மையாகப் பார்க்கின்றதென்றால் பதில் மெய்யன்பைத்தான். விரதம் எனும் வழிபாட்டியலில் மெய்யன்புக்குச் சமாந்தரமாக விதியொழுங்கு வருகின்றமையால் அது பொது வழிபாடே அன்றிச் சிறப்பு வழிபாடில்லை.

பெரியபுராணத் தொகுப்பில் கண்ணப்ப நாயனார் புராணத்திலே இந்த இரண்டு வழிபாட்டையும் சேக்கிழார் ஒப்பிடுகின்றார். கண்ணப்ப நாயனாரிடம் முற்று முழுதான மெய்யன்பு வழிபாடும், சிவசோசரியாரிடம் மெய்யன்புக்குச் சமாந்தரமாக ஒழுங்குமுறையும் இருந்த விதத்தை சேக்கிழார் வரைகின்றார். சிவகோசரியார் ஒன்றும் பத்தியில் குறைந்தவரில்லை. தினமும் இறைவன் மீது அன்பு கொண்டு விதிப்படி இறைவனை வழிபடுகின்றார். ஆயினும் கண்ணப்பரின் முற்று முழுதான ஒப்பற்ற மெய்யன்பு சிவகோசரியாரை விட கண்ணப்பரை ஒரு படி மேலுயர்த்தி விட்டது.

விதிக்கு மேலதிகமான மெய்யன்பை சத்திமேல் காட்ட ஒன்பானிரவு வழிசமைக்கிறது. விதிகள் எதுவுமற்ற மெய்யன்பினுடாகவும், இக்காலத்தில் அடியவர் அம்பிகையை வழிபடுகின்றனர். எனவே விரதம் எனும் நிலையிலிருந்து மேம்பட்ட ஒன்றாகவே ஒன்பானிரவு மிளிர்கிறது. விரத வழிபாட்டினூடாகவும், விரதம் சாரா வழிபாட்டினூடாகவும் இக்காலத்தில் அம்பிகை வழிபடப்படுகின்றாள். இன்னும் சொல்லப் போனால் ஒன்பானிரவு தமிழர் மத்தியில் விழாவாகவே விளங்குகின்றது. அந்த ஒன்பது நாட்களும் இல்லங்கள், பாடசாலைகள், அலுவலகங்கள், தொழிற்கூடங்கள் என அனைத்தும் களைகட்டும், சின்னஞ்சிறு சிறார் முதல் பெரியவர் வரை எம்பெருமானின் திருவருட்சத்தியை வேண்டி வழிபடுவர்.

சைவசமயம் இன்றும் நிலைபெற்று வருவதற்கு இவ்வாறான விழாக்களும் மிக முக்கியமான காரணங்களாகத் திகழ்கின்றன. கோயிலுக்கு வெளியே சமயத்தை எடுத்துவந்து சமூகத்தில் பயிற்றுவிக்கும் அற்புதமான விழாக்காலமே ஒன்பானிரவு விழாக்கோலம். இந்த விழாவை வெறுமனே வழிபாட்டு விழாவாகக் கடந்து செல்வதைத் தாண்டி சைவர்கள் செய்ய வேண்டிய கடமைகள் நிறைய உள்ளன. ஏற்கனவே இடம்பெறும் கலைவிழாக்கள் போட்டிகள் என்பவற்றை விசாலப்படுத்தி சமய அறிவை மக்களிடமும் மாணவ சமூகத்திடமும் கொண்டு சேர்க்க வேண்டும். வெறுமனே கோயில்களைப் பாதுகாப்பதிலும், வழிபாடு ஆற்றுவதிலும் மாத்திரம் சமயவளர்ச்சி தங்கிவிடாது. அதற்கு மேலதிகமாக இவ்வாறான விழாக்கள் ஊடாக சமய மறுமலர்ச்சியை ஏற்படுத்த வேண்டியது சைவமாம் சமயம் சார்ந்த அனைவரினதும் கடன். இளைஞர்களே அணிதிரளுங்கள்! சைவ அமைப்புக்களே வீறுபெறுங்கள், சைவ சமயிகளே விழித்துக் கொள்ளுங்கள்!

**“மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்”**

**திருச்சிற்றம்பலம்**

# இறந்தவர்கள் உண்பார்களா?

## ஒரு தமிழ் மரபாய்வு



முனைவர். இரா.சிவகுமார்,
(மலேசிய அறிவியல் பல்கலைக்கழகம்)



பல காலங்களாகப் போலி பகுத்தறிவு பேசும் கூட்டத்தார்கள், நமது தமிழர் மரபு சடங்குகளைக் குறிப்பாகத் தென்புலத்தார் அல்லது முன்னோர் வழிபாட்டினைப் பல நிலைகளில் குறிவைத்து ஏளனம் செய்வதும், நிந்தனைச் செய்வதும் மலிந்து வருகின்றன. அதனை மேலும் வேடிக்கையாக்கும் முயற்சியில் நமது சைவ சமயம் பேசும் ஒரு சில சிறந்த பேச்சாளர்களும் முனைகின்றனர். பேச்சுக்களும், கருத்துக்களும் எவையாயினும் வள்ளுவப் பெருந்தகையின் சான்றாண்மை இலக்கணத்திற்கு ஏற்ப பட்டறிவுச் சான்றுகளோடு (TRUTH discerning evidence) உண்மைகளை வெளிக்கொணர்வது நமது கடமை.

**“எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு (குறள். 423)”**

Purport: To grasp or discern the TRUTH from whomsoever spoken, from diverse knowledge is wisdom fair.

தமிழ் மரபினை, நெறிப்பட உள்வாங்காது, அதன் மெய்ப்பொருள் காண விழையாது, தூல உடல் நீத்த உயிர்களால் உணவு புசிக்க இயலாது என்று பரப்புரை செய்து வருபவர்களின் கூற்றுகளைத் தமிழ் மரபு ஏரண (the Tamilar science of psyche ascending logics) உணர்வில் மறுக்க எழுந்ததுவே இப்படைப்பு.

நெடுங்காலமாக வேரூன்றிய தென்புல அல்லது முன்னோர் வழிபாடு தமிழர்களிடையே குலதெய்வ வழிபாடாகக் கூர்வு பெற்று நிலை கொண்டிருப்பது தனிச்சிறப்பாகும். மூலத்தில் குலச் சந்தான விருத்தியை ஏழுதலைமுறைக்கு நீள் தொடர் ஒட்டுறவு செய்து, முன்னோர் வாழ்க்கை விழுமியங்களைப் (values) பின்னோக்கி உணர்ந்து உள்வாங்கி, செழுமை அறங்களை முன்னோக்கிச் செலுத்தும் தகைமையைத் தருவது தென்புல வழிபாட்டின் இயல்பாகும். முதலில் ஏறத்தாழ 500 ஆண்டுகள் ஏழுதலைமுறையைத் தொட்டு அதில் ஏறத்தாழ ஓராயிர ஆண்டுகளில் ஈரேழு தலைமுறையினரோடு உறவு நீட்டும் தமிழரின் உறவு அணுக்கம் வியக்கத்தக்கது. எடுத்துக்காட்டாக,

1) தந்தை + தாய் ஸ்ரீ, இரண்டாம் தலைமுறை
2) பாட்டன் (அப்பச்சன், தாதா, தாதை, தாத்தா, போற்றி - போத்தி) + பாட்டி(அப்பாச்சி, அப்பாத்தை, அப்பத்தி, அப்பாய்) ஸ்ரீ,மூன்றாம் தலைமுறை
3) பூட்டன் (அப்பாட்டன், கொள்ளுப் பாட்டன்) + பூட்டி (கொள்ளுப்பாட்டி) ஸ்ரீ, நான்காம் தலைமுறை
4) ஓட்டன்(சீயான், சேயான்) +ஓட்டி(சீயாள், சேயாள்) ஸ்ரீ, ஐந்தாம் தலைமுறை
5) சேயோன் + சேயோள் ஸ்ரீ, ஆறாம் தலைமுறை
6) பரன் + பரை ஸ்ரீ, ஏழாம் தலைமுறை

என்று ஒரு தலைமுறையினர் சராசரி 75 ஆண்டுகள் வாழ்ந்தார்கள் என்றால், ஏழுதலைமுறையினர் 525 ஆண்டுகளை எட்டி, ஈரேழுதலைமுறை 1050 ஆண்டுகள் தொட்டு, ஓராயிரகால பரம்பரை மரபு தேற்றும் பண்பினராகத் திகழ்வர். ஆகவே பண்டு காலம் தொட்டு தமிழ் மரபு காத்த தென்புலத்தார் மரபோடு நம்மைப் பிணைக்கும் பெரு முயற்சியாக முன்னோர் வழிபாடு திகழ்கின்றது.

தென்புல அல்லது முன்னோர் வழிபாட்டின் கருப்பொருள் இன்று நமது அடுத்த வழித்தோன்றல்களுக்கு அல்லது சந்ததிக்குக் கடத்தபடும் மரபி எனும் மரபணுக்களின்(பநநெள) உயிரியல் கல்வியாக மட்டும் நில்லாது. இம்மரபு தமிழர்களின் உயிர்ப்புல கூர்வு அறிவியலாக (psyche field evolutionary science) தமிழர்களிடையே நிலைகொண்டுள்ளது.

தென்புல மரபின் வழி உயிர்ப்புல கூர்வு (psyche field evolution) அறியும் அறிவைத் தொல்மரபு தூண்டல்களாகப் புகட்டும், இயக்கும் அறிவியலைத் தமிழர்கள் பண்டைய காலம் தொட்டே அறிந்திருந்தனர். எடுத்துக்காட்டாக,

தற்கால இன நடத்தையியலர் (Ethologists) “இந்தத் தொல்மரபு மூலயந்திரவுருக் (archetypes) கட்டமைவுகளை, உட்திறனாளுமை (innate) விடுவிக்கும் இயங்கமைப்பு (IMu;vk; - innate releasing mechanism IRM) என்று அழைப்பர். ஒவ்வொரு IRஆமும் சூழலில் ஒரு குறியீட்டு ஊக்கப்பகுதியை எதிர்கொள்ளும் போது அதற்கு உரிய தூண்டல்களைப் பெற்று தீவிரமாகச் செயல்படுகின்றன. Ethologists call these structures as innate releasing mechanisms (IRM) – Each IRM is primed to become active when an appropriate stimulus-called a sign stimulus is encountered in the environment. (Thanks: Stevens and Anthony, 1994)” என்று முடிவுரைத்துள்ளனர். மேலும் இதன் விரிவுக்குத் தமிழர் கால ஏரண மெய்யறிவு: அகக்காலத்தியல் (சிவகுமார் 2022டி, பக்.492) நூலைக் காணவும்.

ஆனால் இன்று போலி பகுத்தறிவு பேசும் ஒரு சாரார், தொன்மை தமிழ் மரபு உண்மையினை, உயிர்ப்புல கூர்வு ஆய்வுகளை ஆழமாக ஆய்வுக்குள் கொண்டுவராது, தனக்குத் தோன்றியபடி இறந்தவர்களுக்கு உடலில்லை, அவர்கள் எப்படி உண்பார்கள் என்றெல்லாம் பல தருக்கம் (Logics) பேசி தென்புலத்தார் அல்லது முன்னோர் வழிபாட்டினைப் பல நிலைகளில் குறிவைத்து ஏளனம் செய்வதோடு மறைமுகமாக புறக்கணிக்கத் தூண்டுகின்றனர். முன்னோர் வழிபாட்டின் தெளிவான மரபு ஆய்வினைத் தராது அவரவர் ஊகமாகப் பேசுவது ஏரணமல்லவே. தூல உடல் நீத்த உயிர்களால் உணவு புசிக்க எப்படி முடியும் என்று தற்காலத்தினர் கேள்வி கேட்பார் என்பதற்காகத் தமிழர் மரபாகக் காணும் முன்னோர் வழிபாட்டினை, அதன் உண்மையினை முறையாக ஆய்வு செய்யாது தனக்குத் தோன்றியபடி எதையும் திரித்துப் பேசுவது, ஏளனம் செய்வது தமிழர் மரபு காக்கும் முறையா? அல்லது தமிழர் உயிர்ப்புல கூர்வு அறியும் ஏரணமா? அல்லது அறிவியலா?

அதுவும் சைவ சமயம், தமிழ் மரபினைப் போதிக்கும் சில ஆசிரியர்களும், ஏளனம் பேசுபவரோடு இணைந்து முறையான தமிழ் மரபு ஆய்வுகளை, சான்றுகளைத் தராது, அவர்களுடன் ஒத்துப் பேச ஆரம்பித்தால், தமிழ் அறிவியல்,



நமது சமயம், மரபு எவ்வாறு தற்காக்கப்பட்டு, நிலநீடு (sustain) பெறும்? மாண்பு பெறும்? இது பல்லாயிர தமிழர்களின் நம்பிக்கையை தூரறுக்கும் (வேரறுக்கும்) முயற்சியாகின்றதே?

“மரபு நிலை திரியின் பிறிது பிறிதாகும்” (தொல். பொருள். 637 என்பது தமிழர் மரபிற்கு அரண் என்பதை நாம் மனதில் நிறுத்த மறந்தோமானால், தமிழ் மரபு வீழ்ச்சிக்கு நாமே வித்திடுபவராகிவிடுவோம்.

முன்னோர் வழிபாட்டினை முறையான உயிர்ப்புல கூர்வு ஏரணத்திற்கு உட்பட்டு, ஆய்வு செய்யாது, பொதுவில் பேசுவார்களின் கருத்திற்கு மறுப்பாக எழுந்ததுவே இப்பதிவு. பண்டைய தமிழ் மரபு போற்றும் முன்னோர் வழிபாட்டினை மக்களுக்கு உணர்த்தப் பெரிதும் துணை செய்யும் என்பதால் இந்த இறந்தவர்கள் உண்பார்களா? எனும் குறும் ஆய்வு செய்யப்படுகின்றது.

**பொதுக் கருத்து:** முதலில் இறந்தவர்கள் உண்ண முடியாது என்பது தமிழர் கொள்கையா? இறந்த அல்லது தூல உடல் நீத்த உயிர்களால் உணவு புசிக்க இயலாது என்பது இக்கொள்கையின் முடிவாகின்றது.

இக்கருத்திற்கு கொடுக்கப்படும் வலுவற்ற ஏதுக்களும் (weak reasoning), உதாரணங்களும்

“உண்பதற்கு என்ன வேண்டும் உடம்பு வேண்டும். இறந்து விட்டால் உடல் உயிர் உடலை விட்டுப் பிரிந்து விடுகின்றது. இந்த உயிர் உடலிய இன்பங்களை அனுபவிக்க, தாகமாக இருக்கின்றது என்றால் வாய் இருக்க வேண்டும். பசிக்க வயிறு இருக்க வேண்டும், தூங்க உடம்பிருக்கவேண்டும், இந்த ஐந்தும் நம்மை விட்டு நீங்கிவிட்டது. களங்கள் முடிந்துவிட்டன. உயிர் நித்தியமானது, உயிருக்குப் பசிக்காது, உயிருக்குத் தூக்கமில்லை, உயிரைத் தட்ட முடியாது, உயிரை எரிக்க முடியாது, இதையெல்லாம் தருவது உடம்பு. உடம்பே இல்லாத உயிருக்கு எப்படி பசிக்கும், வலிக்கும். இறந்தவருக்கு வைத்த பயாசத்தை எப்படிச் சாப்பிட முடியும்? முடியாது. இறைவனும் அது போல உண்பதில்லை. இறைவனுக்கும் பசிக்காது, பின்பு முன்னோர் வழிபாட்டில் படையல் எதற்கு? முன்னோர்களுக்கு அவர்கள் செய்த தியாகத்திற்கு நன்றியாக அவையெல்லாம் வழங்கப்படுகின்றன” என்பதாகும்.

1. இக்கருத்துகளில் கொடுக்கப்படும் வலுவற்ற ஏதுவும் (weak reasoning), உதாரணங்களிலும் (examples) பிழைகள் உள்ளனவா? இல்லையா? என்பது முதல் கேள்வி. அதாவது இது தமிழர் மரபுக்கு முரணானதா?இல்லையா? முதலில் இறந்தவர்கள் உண்ண முடியாது என்பது தமிழர் கொள்கையா?

**மறுப்பு:** இறந்த அல்லது தூல உடல் நீத்த உயிர்களால் உண்ண முடியும் என்பது தமிழர் கொள்கையேயன்றி,



உண்ண முடியாது என்பது தமிழ் மரபன்று.

**எடுத்துக்காட்டு 1:**

**செவியுணவின் கேள்வி உடையார் அவியுணவின்
ஆன்றாரோடு ஒப்பர் நிலத்து (கேள்வி குறள் :413)**

என்று ஆன்றார் (அமரர்) அவியுணவு உண்பர் என்பதை திருவள்ளுவர் உறுதிசெய்கிறார்.

**பொருள்:** செவியுணவாகிய கேள்வி உடையவர் நிலத்தில் வாழ்கின்றவரே ஆயினும், அவி உணவைக்கொள்ளும் ஆன்றாரோடு (அமரர் / தேவரோடு) ஒப்பாவர். ‘அவியுணவின் ஆன்றார்’ என்ற தொடர்க்கு அவியை உணவாக உடைய தேவர், அவியுணவினராகிய அமரர், அவியுணவினையுடைய தேவர், அவி உணவைக்கொள்ளும் தேவர், ‘அவி’ எனும் உணவினைப் பெறுகின்ற தேவர், வேள்வி உணவு கொள்ளும் விண்ணுலகில் உள்ள தேவர், அவியுணவு உண்ட தேவர், அவியுணவினைக் கொள்ளும் தேவர், அவித்துப் பக்குவம் செய்யப்பட்ட உணவுகள் விடயத்தில் வானுலகத்திலுள்ள தேவர், பக்குவமான நல்ல உணவுகளைத் தேடித்தேடி உண்ணும் பேருண்டியர், வேள்வியில் செய்யும் உணவை ஏற்றுக் கொள்ளும் விண்ணவர், வேள்வி வழியாக உணவினைப் பெறும் தேவர், அவியுணவைக் கொண்டு வாழும் தேவர், வானுலகத்தில் வேள்வி உணவு உண்ட தேவர், குறைந்த உணவினையுடைய நிறைந்த அறிவினையுடையவர், அவியுணவினையுடைய விண்ணுலகத்தேவர், தேவ உணவாகிய அவிகள் உண்ட தேவர், யாகங்களில் உணவளிக்கப்படும் தேவர் என்றவாறு மணக்குடவர், பரிப்பெருமாள், பரிதி, இரா. சாரங்கபாணி, தேவநேயப் பாவாணர், காலிங்கர், பரிமேலழகர் போன்ற எல்லா உரையாசிரியர்களும் ஒத்தப் பொருள் கூறியுள்ளனர்.

**எடுத்துக்காட்டு 2:**

சங்கத்தமிழ் நுண் மாண் பேரறிஞர் தொல்காப்பியர் இறந்தோர் வழிபாடு செய்யும் பொழுது நன்றி நவில்வதோடு நில்லாமல் இறந்தோருக்கு உணவு அளிப்பதை வலியுறுத்தி இலக்கணமாக்கி உள்ளார். ஏன்?

**காட்சி, கால்கோள் நீர்ப்படை நடுகல்
சீர்த்தகு மரபில் பெரும்படை வாழ்த்தல் என்று
இருமூன்று மரபில் கல்லொடு புணர (தொல். புறத்திணை இயல், 5)**

இங்கு பெரும்படை என்பது இறந்தவர்களுக்கு இடுபொருள் படையல் வைப்பது தமிழர் இயல்பு. தூல உடல் நீத்த உயிர்களுக்கு அல்லது தூல உடல் இன்றி உண்ண முடியாதவர்களுக்கு உணவு ஏன் வைக்க வேண்டும்



என்பதுதான் இங்குக் கேள்வி. சிலர் கூறுவது போன்று உணவு வைக்காது சீர்த்தகு மரபில் பெரும்படை இன்றி ‘வாழ்த்தல்’ (வணங்கி நன்றி) மட்டுமே சொன்னால் போதுமே?

(5ஆம் பக்கம் பார்க்க)

## இறந்தவர்கள் உண்பார்களா...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

எப்படியானால் உண்ணாதவர்க்கு, தூல உடல் நீத்தவருக்குப் படையல் எதற்கு? அப்படியல்லாது, தொல்காப்பியர் பெரும்படை (உணவு, இடுபொருள்) வைக்க வேண்டும் என்று வழுத்தி ஏற்று, இதுவே சீர் தரு மரபு என்கிறார்.

ஏன். அப்படியானால் சிலர் கூறுவது போன்று இங்குத் தொல்காப்பியர் இறந்தவர்கள் உண்ணமாட்டார்கள் என்பதை அறியாது, தெளிவில்லாது இலக்கணம் செய்தார் என்று கருத்துரைக்கலாமா? தமிழ் மரபு தாங்கும் வள்ளுவம், தொல்காப்பியம் பிழைப்படுகின்றனவே?

அப்படியும் இல்லாது நாம் வாழ்வது 21ஆம் நூற்றாண்டு என்னும் அறிவுலகம். நாம் வள்ளுவர், தொல்காப்பியர் போன்றோர் ஓலைச்சுவடிகளில் எழுதும் காலத்தில் வாழவில்லை என்று பதில் கூறி இதெல்லாம் தேவையில்லை என்று புதுவக் காலபதிலைச் சொல்லிவிடலாமா?

**எடுத்துக்காட்டு 3:**

**“சில் பலி செய்து பல் பிரப்பு இரீஇ”** (திருமுருகாற்றுப்படை 23) தூய வெள்ளரிசியை சிறு பலியாக இட்டு, பல குறுணிப் படையல்களையும் வைத்தல்

**“பலிகண் மாறிய பாழ்படு பொதியில்”** (புறநா.52)

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி பலி என்ற சொல்லுக்கு தீக் குண்டத்தில் (யாகத்தில்) தேவர், முன்னோர் ஆகியோர்க்கு இடும் உணவுப்பொருள்:

**“காக்கையது பலியே”** (குறுந்.210) உண்ண இடுஞ்சோறு

**“ஊர்தொறும் பலி கொண்டு உய்க்கும்”** (திருநாவுக்கரசர், திருமுறை 4.01.3) சோற்றினைப் பிச்சையாகத் தருதல் (Boiled Rice Given To Mendicants, Alms)

என்றெல்லாம் பொருள் தரும் சங்கத்தமிழ் அறிஞர்கள், தெய்வ ஞானிகள் அனைவரும் உண்ண முடியாத உயிருக்கு உணவளிக்கும் ‘மடமையினை’ ஏற்றனர் என்று முடிவு செய்யலாமா? தமிழர்கள் உண்ணாத உயிர்களுக்கு உணவளிக்கும் ஒரு மடமையினை மரபாக ஏற்றனர் என்று பொதுவாக முடிவு கூறலாமா?

நமது சிந்தனைக்காக ஒரு கேள்வி: நன்றியைப் பல்வேறு நிலைகளில் வெளிப்படுத்த இயலும். நீத்தார் நினைவு கூறலாம், அவர் சென்ற இடங்களுக்குச் சென்று மீள் உணர்வு பெறலாம், போற்றி நன்றி சொல்லி வாழ்த்தலாம். இதெல்லாம் விடுத்து அவர்களுக்கு உணவு / படையல் அளிப்பது தேவையா? உண்ண முடியாதவர்களுக்கு உணவு அளிப்பது மடமையன்றோ என்று ஒரு இளைஞனைக் கேட்க தூண்டும் கருத்திற்கு வித்திட நாமே முனைவது தமிழ் மரபு மீட்சியா? அல்லது வீழ்ச்சியா?

சிலர் கூறுவது போல் தூல உடல் நீத்த உயிர்கள், படைத்த உணவை உண்பதில்லை என்று சொல்கிறீர்கள் அதற்கு முரணாக நமது தெய்வப்பனுவல்களும், இலக்கியங்களும், அறிஞர்களும் அவ்வாறு சொல்லாமல், சூக்கும உடல் உண்பதாகச் சொல்கிறார்களே அது எப்படி என்று கேட்டால் அவ்வாறு இலக்கியங்கள் சொல்வது மெய்யல்ல என்று தமிழை, தமிழ் மரபை, நமது சமயத்தை ஆழக் கற்றவர்கள் எவரேனும் சொல்வாரா? இல்லையே. அப்படியானால் இறந்தவர்கள் உண்ண முடியாது என்பதைக் கொள்கையாகவே பறைசாற்றியவர்களின் உண்மையான நிலைப்பாடு தான் என்ன?

தமிழ் பண்பாடு, சமய ஆழறிவு இல்லாதவர்களுக்கு முன்னால் அமர்ந்து நமது மரபு காக்க, முயன்ற நமது முன்னோர்களின் மரபை வெறுமனே தான்தோன்றியாக இறந்தவர்கள் உண்ண முடியாது என்று ஒரு கொள்கையாக மறுத்து, பரப்புரை செய்யும் சிலரின் கருத்தில் பிழை உண்டா? இல்லையா? என்பதை மீண்டும் தெளிவு செய்து மெய் நிறுத்துவது யாருடைய கடன்? தமிழ் மெய்யறிவு, மரபு போற்றும் ஒரு தமிழரின் கடனன்றோ.

உயிருக்கு நுண்ணுடல் இருக்கிறது என்பதைத் தமிழ் மரபு பகுத்தறிவு பேசுபவர்கள் அறிந்திருப்பாரானால், ஓர் இறப்பில் தூல உடலே நீங்கும், உயிருக்கு நுண்ணுடல் உண்டு என்று முதலில் நம் முன்னோர் (சங்கத்தமிழ், சைவ சித்தாந்தம், நாயன்மார்கள், திருமந்திரம்) நிலைப்பாட்டை உறுதியாக முதன்மைப்படுத்தியிருப்பார்களே. ஏன் அதனைச் செய்யவில்லை. ஆகவே தமிழர் உயிர் புலக்கூர்வு ஏரணம் ஆய்வு மரபைப் திரித்து பிழைபட பகுத்தறிவு சார்புணர்வால் பேசும் அணுகு முறையை தமிழ் மரபு போற்றும் ஆகம அறிவியல் (psyche ascending science) மரபாக ஏற்க இயலாது.

அதுவும் பல்லாயிர தமிழர்கள் தங்களின் முன்னோர்களுக்கு அளிக்கும் படையல், அவ்வுயிர்களுக்குச் சேராது என்று மறுத்து, அது ஒரு தேவையற்ற சடங்காக சித்தரிக்கும் முறை ஏற்கக்கூடியதா?

2. உயிர் புலக்கூர்வில், நுண்ணுடல் (சூக்கும தேகம்) உயிர்களுக்கு உண்டு எனும் அறிவு இல்லாது, நுண்ணுடல் தன்மாத்திரைப் புல இயல்பை ஆய்வு செய்யாது தூல காயத்தை நீக்கிய உயிர் ஒரு சடப்பொருளுக்கு நிகராக வரையறை செய்வது தவறான ஓர் ஏரணம் அல்லவா? .

**எடுத்துக்காட்டு:**

“இறந்தவர்கள் உண்ண முடியாது எனும் கொள்கையில் உண்பதற்கு என்ன வேண்டும்? உடம்பு வேண்டும். இறந்து விட்டால் உடல் உயிர் உடலை விட்டுப் பிரிந்து விடுகின்றது. இந்த உயிர் உடலிய இன்பங்களை அனுபவிக்க, தாகமாக இருக்கின்றது என்றால் வாய் இருக்க வேண்டும், பசிக்க வயிறு இருக்க வேண்டும், தூங்க உடம்பிருக்கவேண்டும், இந்த அஞ்சும் நம்மை விட்டு நீங்கிவிட்டது. களங்கள் முடிந்துவிட்டன. உயிர் நித்தியமானது, உயிருக்குப் பசிக்காது, உயிருக்குத் தூக்கமில்லை, உயிரைத் தட்ட முடியாது, உயிரை எரிக்க முடியாது, இதையெல்லாம் தருவது உடம்பு. உடம்பே இல்லாத உயிருக்கு எப்படி வலிக்கும், பசிக்கும். இறந்தவருக்கு வைத்த பயாசத்தை எப்படிச் சாப்பிடும்? முடியாது.”

**இதற்கான மறுப்பு:** உயிர் ஆகுதலுக்குப் புசிப்பு உண்டா? இல்லையா? தூல (பூத) உடல் கடந்து நுண்ணுடல் (சூக்கும காயப்) புசிப்பு உயிர்களுக்கு உண்டு என்பதுவே தமிழர்களின் நிலைப்பாடு. உயிர் ஆகம அறிவியலில் போகப்புசிப்பு, இயலயப்புசிப்பு, அதிகாரப்புசிப்பு நோக்கி ஏன் உயிர்கள் வேட்கை நடை போடுகின்றன? என்று உயிர் ஆகம ஏரணம் (psyche ascending logic) செய்துக்காட்டலாம். முதலில் உயிர்ப்புல கூர்வியலைத் தமிழர்கள் எவ்வாறு ஆய்வு செய்கின்றனர் என்பதைச் சிறிது அறிதல் தேவை.

முதலில் உயிர் என்பது சித்துப் (psychic consciousness) பொருளா அல்லது சடப்பொருளா (அறிவில் பொருள் (பிங்.) lifeless matter.)? உயிர் சித்துப் (psychic consciousness) பொருள் என்பதை ஒரு சிறு மாணவன் எளிதாக



பிரித்துக்காட்டிவிடுவான். சடப்பொருள் (அறிவில் பொருள் (பிங்.) lifeless matter.) இன்ப துன்பம் உணராது, நுகராது அல்லது புசிக்காது. ஆனால் சித்துப் (psychic consciousness) பொருளாகிய உயிர் இன்ப துன்பம் வேட்கும், உணரும், நுகரும் அல்லது புசிக்கும்.

அடுத்தக் கேள்வி, உடம்பு சடப்பொருளா (அறிவில் பொருள் (பிங்.) lifeless matter.) அல்லது சித்துப் (psychic consciousness) பொருளா? சடப்பொருளாகிய (அறிவில் பொருள் (பிங்.) lifeless matter.) இறந்த உடல் இன்ப துன்பம் உணராது, நுகராது அல்லது புசிக்காது, தீயிலிட்டாலும் அலறாது என்பதை உலகில் உள்ள எவரும் உணர்வர். அப்படியானால் சடமாகிய உடல் நீங்க, இன்ப துன்பம் உணராது, நுகராது அல்லது புசிக்காது உயிர் மீண்டும் சடமாகிவிடுமா? அல்லது சித்துப் (psychic consciousness) பொருளாகவே திகழுமா?

சித்தாகிய உயிர் என்றென்றும் சடமாகாது என்பது உயிர்ப்புல கூர்வு அறிவியலுக்கு (psyche field evolutionary science) முரண்படும் என்பது தெளிவு. விரிவு ஆழம். மேலும் விரிவுக்கு (சிவகுமார், 2022டி) கடவுள் புலம், உயிர்களின் புலக்கூர்வு இயல்களைக் காணவும்.

மேலும் திருமூலர், “சித்துக்குச் சித்தன்றிச் சேர்விடம் வேறுண்டோ (திருமுறை 10.104.4.23)” என்று சித்துப் பொருளாகிய உயிர்கள் சித்தாகிய உயிர்ப்பொருளோடு ஒருமையில் இருமையாக (அத்துவிதத்தில் அந்நியமாக - மெய்கண்டார்) நிற்குமேயன்றி சடமாகாது என்பதையும் உறுதி செய்கிறார். அப்படியானால் தூல உடல் நீத்த உயிருக்கு வலி இருக்காது, புசிப்பிருக்காது என்பதெல்லாம் சடப்பொருளுக்கு ஒப்பாகுமேயன்று சித்துப்பொருளுக்குரிய குணங்களாகாது என்பதை அறியாது பேசுவது உயிர் அறிவியல் ஏரணமா? உயிருக்குப் பசிக்காது என்பது உண்மையா?

**கேள்விகள்:** பசிக்காத உயிருக்குப் புசிப்பு எதற்கு? தூல உடல் இருப்பதனால் மட்டுமே உயிர்களுக்குப் பசி உண்டா? உடலால் வரும் உணவுப்பசி, தாகம், காமப்பசி போன்ற போகப்பசியை உயிர்கள் ஏன் வேட்க வேண்டும்? தூல உடல் மட்டுமே புசிப்பைப் பெறுமானால், உயிர் ஏன் பல்வேறு ஓசை, ஊறு, ஒளி, சுவை,நாற்றம் தன்மாத்திரை புலன்களுக்கு ஆட்பட வேண்டும், துன்ப உணர்வினை வலிகளாக, இன்ப உணர்வினை தன்மாத்திரையில் வலிமையாகப் பெற வேண்டும்? புலப்பாடுகளைச் சட உடலா புசிக்கின்றது? உயிர் நீங்க உடல் அவற்றை ஏன் தானே செய்ய இயலவில்லை? உயிருக்கு வலி இல்லை என்பது உண்மையா? எப்படி?

**கேள்வி:** உயிர் சடப்பொருளா? அல்லது சித்துப் (psychic consciousness) பொருளா? வலி இல்லாத உயிருக்கு, வலிக்கும் தூல உடல் எதற்கு? இப்படி கேள்விகள் நீளும்?

இதற்குத் திருமூலர்,

**“ஈறாகா தேஎவ் வுயிரும் பிறந்திறந்(து)**
**ஆறாத வல்வினை யால்அடி யுண்ணுமே**
(திருமுறை 10.8.3.19)”

முத்தி அடைய இயலாத எவ்வுயிரும் பிறந்திறந்(து) ஆறாத வல்வினையால் அல்லலுறுமே என்பார். மலத்தில் (இருள்) பட்டுழலும் கேவல அவத்தை உயிர் ஆதியிலேயே, வலியுள்ளது என்பதால், புசிப்பு அதற்கு ஏதுவாகுவது சித்தாந்த தெளிவு மட்டுமல்லாது தமிழர் சங்கப்பெரு மரபும் அதுவே. விரிவு ஆழம் என்பதால் இங்கில்லை.

**நுண்ணுடல் அறிவு தெளிவு பெற:**

உடல் வழி ஏற்படும் பசிகளை புசிப்பது தூல உடல் மட்டும் தானா, ஐயுறைகள் கொண்ட உயிரா அல்லது தூல உடலின் வழி உயிரா?

தூல உடல் மட்டும் தான் நுகர்கின்றது என்றால் உயிர் நீங்கத் தூல உடல் தொடர்ந்து புசித்தல் இயலுமா? பிணம் என்பதால் அது இயலாது. தூல உடல் வழி மட்டுமே உயிர் நுகர்கின்றது என்றால் தூல உடல் ஒடுங்க உயிர் நுகர இயலாது இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாது உறக்கத்தில் கனவு, சுழுத்தி, துரிய நுகர்வுகள் பெற்று நிற்பது எங்ஙனம் என்று வினவி மெய்கண்டார் நுண்ணுடல் / சூக்கும காயம் உண்மை நிறுவுவது அல்லது மெய்ப்பிப்பது போல் ஐம்புலன் ஒடுக்கம் அறிதலின், கண்படில் உண்டி வினையின்மையின் என்பார்.

உயிர்கள் காரண உடல், கஞ்சுக உடல், குண உடல், சூக்கும உடல், தூல உடல் என்று பன்னடுக்கு ஐயுறைகள் பெற்று நிற்பதால், தூல உடல் நீங்க, சூக்கும உடல் நுகர்வு உயிர்களுக்கு உண்டு என்பதை அறிதல் வேண்டும்.

பன்னடுக்கு நுண்ணுடல் (சூக்கும காயம் - பஞ்ச கோசங்கள்/ ஐயுறைகள்)

உயிர் ஐவகை உடல்கள் பொருந்தி அவற்றில் கட்டுண்டு நிற்கும், அவ்வுடல்கள் காரண உடல், கஞ்சுக உடல், குண உடல், சூக்கும உடல், தூல உடல் ஆகும். அவ்வுடல்கள் காரண உடல், கஞ்சுக உடல், குண உடல் சித்தம் உணரும் பொதுவில் பரதேகங்களாகும்.

1) காரண சாரீரம்: உயிர் மாயா காரண பொருள் சேரும் பொழுது காரண சாரீரம் அல்லது உடல் பெறுகிறது.

2) கஞ்சுக (சட்டை) உடல்: காலம், நியதி, கலை, வித்தை, அராகம் வித்தியா பொருள் பொருந்தி - அறிவு, இச்சை, செயல் பெற்று திகழக் கஞ்சுக (சட்டை) உடல் பெறும் - உயிர் இங்குப் புருடன் என்று அழைக்கப்படும்.

3) குண உடல்: மூலப் பிரகிருதியில் (அசுத்த மாயையில் படுவதால்) உயிர் சாத்துவிகம், இராசதம், தாமச முக்குணங்கள் பெற்று குண உடல் உடையதாகும்,

4) சூக்கும உடல்: ஓசை, ஊறு, ஒளி, சுவை நாற்றம் தன்மாத்திரை ஐந்து ஆங்காரம், மனம், புத்தி ஆகிய எட்டும் புரியட்ட காயமாகும்

5) தூல பரு உடல்: பூதங்கள் ஐந்து, ஞானேந்திரியம் ஐந்து, கன்மேந்திரியங்கள் ஐந்து ஆக பதினைந்து சேர்ந்து தாத்துவிகங்கள் (என்பூ, தோல், தசை + ஸ்ரீஅறுபது தாத்துவிகங்கள்) ஆக விரிந்து செயல்படும்.

(நன்றி: சிவஞானமுனிவர், சிவஞானப்பாடியம்)

மேற்கோள்கள்

1.Stevens and Anthony (2006), ‘The archetypes’> in Papadopoulos, R. K. (ed.) The Handbook of Jungian Psychology Theory, Practice and Applications. Routledge.

2. ஆனந்த ராசன், (2004), சிவஞான பாடிய நுண்பொருள் விளக்கம், அருள்நந்தி சிவம் புத்தக நிலையம்.

3.சிவகுமார் இராமகிருஷ்ணன் (2022a), தமிழர் கால ஏரண மெய்யறிவு தொகுதி 1: புறக்காலத்தியல், உலகனார் ஆகம அறிவியல் மையம்.

4.சிவகுமார் இராமகிருஷ்ணன் (2022b), தமிழர் கால ஏரண மெய்யறிவு தொகுதி 2: அகக்காலத்தியல், உலகனார் ஆகம அறிவியல் மையம்.

5. ப.பாண்டியராஜா,(2022) சங்கச் சொல்வளம் http://sangacholai.in/Essays-1.7.html.

(தொடரும்)

# அறம் அறக்கட்டளை நிறுவனத்தின் "அறம் செய விரும்பு" நிகழ்வு - 2022







தமிழரின் ஆதிப் பண்பாட்டு விழுமியங்களை, தொன்மங்களை, அடையாளங்களை உலகறியச்செய்தலும் அவற்றை அடுத்த தலைமுறையினருக்கு, குறிப்பாக மாணவர்களுக்கு ஊடுகடத்துவதன் மூலம் பாதுகாத்தலும் என்ற நோக்கத்துடன் ஒசுத்திரேலியாவில் ஆரம்பிக்கப்பட்ட அறம் அறக்கட்டளை நிறுவனமானது, "அறம் செய விரும்பு" எனும் நிகழ்வினை புரட்டாசித் திங்கள் 16ம் நாள் (3 அக்டோபர் 2022) அன்று ஒசுத்திரேலியாவின் சிட்னி நகரில் மிகச்சிறப்பாக நடாத்தி இருந்தது. இந்நிகழ்வானது அறம் அறக்கட்டளை நிறுவனத்தின் செயற்பாடுகளுக்குத் துணை நின்றோர்களுக்கு நன்றி கூறும் முகமாகவும் அவர்களை கௌரவப்படுத்துவதாகவும் அமைந்திருந்தது.

அறம் அறக்கட்டளையின் பிரதான நோக்கங்களாவன:

- தமிழரின் ஆதிப் பண்பாடு, தொன்மங்கள், அடையாளங்களை உலகறியச்செய்தலும் அவற்றை அடுத்த தலைமுறையினருக்கு, குறிப்பாக மாணவர்களுக்கு ஊடுகடத்துவதன் மூலம் பாதுகாத்தலும்.
- ஏற்றத்தாழ்வு முறைமைகள் அற்ற வழிபாட்டு வசதிகளை அடுத்த தலைமுறையினருக்கு, குறிப்பாக மாணவர்களுக்கு ஏற்படுத்துவதன் மூலம் அவர்களது பண்பாட்டு வளர்ச்சிக்குப் பங்களித்தல்.
- ஏற்றத்தாழ்வு முறைமைகள் அற்ற பண்பாட்டு நடுவங்களை நிறுவி அதன்வழி தூரநோக்குள்ள கல்வி, மருத்துவம், வாழ்வாதாரச் செயற்திட்டங்களை செயற்படுத்துவதன் மூலம் சமூகக் கட்டமைப்பினைப் பலப்படுத்துதல்.
- தமிழரின் ஆதிப் பண்பாடு, தொன்மங்கள், அடையாளங்கள் தொடர்பான ஆராய்ச்சிகளை முன்னெடுத்தலும் ஊக்குவித்தலும்.
- தமிழரின் ஆதிப் பண்பாடு, தொன்மங்கள், அடையாளங்கள் தொடர்பான ஆவணப்படுத்தலை முன்னெடுத்தலும் ஊக்குவித்தலும்.

**"அறம் செய விரும்பு"** நிகழ்வானது சிட்னி நகரின் வென்ற்வேர்த்வில் என்ற இடத்திலுள்ள ரெட்கம் மண்டபத்தில் மாலை 6 மணியளவில் தமிழ் கலை கலாச்சார முறைப்படி தொடங்கி இருந்தது. விருந்தினர்கள், அன்பர்கள், ஆதரவாளர்களின் வருகையினைத் தொடர்ந்து, மாலை 6.15 மணியளவில் மங்கல விளக்கேற்றலும் அதனைத் தொடர்ந்து இறை வணக்கமும் இடம்பெற்றது. தொடர்ந்து வரவேற்புரையினை அறம் அறக்கட்டளை நிறுவனத்தின் தலைவர் சிவத்திரு சிதம்பரகுமார் தேவேந்திரம்பிள்ளை அவர்கள் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து அறம் அறக்கட்டளையின் நோக்கங்கள் மற்றும் செயல் திட்டங்கள் தொடர்பான தொகுப்புரை இடம்பெற்றது. இத் தொகுப்புரையில் அறம் அறக்கட்டளை நிறுவனத்தின் நோக்கத்தினையும், இந்நிறுவனத்தின் கடந்தகால செயற்பாடுகளும் அவற்றினூடாக சைவத் தமிழ் சமூகத்தில் குறிப்பாக மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட்ட சைவ சமய ஈடுபாடும், சமய வழியூடான கல்வியும் பற்றிய விடயங்கள் பகிரப்பட்டன.இத் தொகுப்புரையானது பார்வையாளர்களிடம் அறம் அறக்கட்டளையின் செயற்பாடுகள் பற்றிய ஒரு பிரமிப்பை தோற்றுவித்ததுடன் அதன் செயற்பாடுகளில் தாங்களும் ஒரு பங்காளர்களாக இருக்கவேண்டும் என்ற ஆர்வத்தையும் ஏற்படுத்தியிருந்தது.

இதனைத் தொடர்ந்து இந்தியாவில் இருந்து சிறப்பு விருந்தினராக வருகை தந்திருந்த சிவத்திரு மதுரை சொ.சொ. மீனாட்சிசுந்தரம் ஐயா அவர்களின் **"அறம் செய விரும்பு"** எனும் சிறப்பு சொற்பொழிவு இடம்பெற்றது. அறம் செய்ய வேண்டியதின் அவசியத்தையும் அதனால் ஏற்படும் நன்மைகள் பற்றியதாகவும் அவரின் சிறப்புரை மிக எளிய தமிழில் அனைவரையும் கவரும் வண்ணமாக அமைந்திருந்தது.

அதனையடுத்து ஒரு முக்கிய நிகழ்வாக அறம் அறக்கட்டளையின் செயற்பாடுகளுக்கு உறுதுணையாக இருந்து, அதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த மற்றும் அளித்து வருகின்ற கொடையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு நடைபெற்றது. கொடையாளர்கள் அனைவரும் விழா மேடைக்கு அழைக்கப்பட்டு பொன்னாடை போர்த்தி, விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.

தொடர்ந்து 'ஒசுத்திரேலியா சைவ மாணவர் சபையின்' தொடக்க நிகழ்வு இடம்பெற்றது. ஒசுத்திரேலியாவில் வசிக்கும் தமிழ் மாணவர்களிடையே சைவ சமய அறிவை விரிவடைய செய்வதற்கும், அதன் வழி அவர்கள் தங்கள் வாழ்க்கைப் பயணத்தை மேன்மையுறச் செய்யும் நோக்குடனும் இவ்வமைப்பானது தொடங்கி வைக்கப்பட்டது. ஒசுத்திரேலியா தமிழ் உயர்கல்விப் பாடசாலை மாணவர்கள் உறுப்பினர்களாக இணைக்கப்பட்டு, விழா மேடையில் அறிமுகம் செய்தும் வைக்கப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து நன்றி உரை இடம்பெற்றது. இறுதியாக வந்தாரை வரவேற்கும் தமிழர் பண்பாட்டின் மேன்மையை நிறைவுறச் செய்யும் வண்ணமாக இராப்போசன உணவு விருந்து, விழாவில் கலந்துகொண்ட அனைவருக்கும் வழங்கப்பட்டது. இந்த விருந்துபசாரத்தின் போது இந்நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் அறம் அறக்கட்டளையின் செயற்பாடுகள் பற்றிய மேலதிக விபரங்களை நிர்வாக உறுப்பினர்களிடம் இருந்து அறிந்துகொண்டதையும் அதற்கு பங்களிப்பு செய்யும் முறைமைகள் பற்றி தெரிந்துகொண்டதையும் காணக்கூடியதாக இருந்தது.

இலங்கைத் தமிழர்கள் தமது சொந்த நாட்டில் வாழ்ந்தாலும் அல்லது புலம்பெயர்ந்து வேற்று நாட்டினில் வாழ்ந்தாலும் அவர்கள் தங்கள் பண்பாடு, தொன்மங்கள், அடையாளங்களை பேணிப் பாதுகாப்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும் என்பதுடன் அவற்றை அடுத்த தலைமுறைக்கு ஊடுகடத்தவும் வேண்டும் என்பதை ஆணித்தரமாக உரைத்த, அதாவது அறத்தின் வழிநடப்பதை ஊக்குவிக்கும் ஒரு விழாவாக **"அறம் செய விரும்பு"** எனும் நிகழ்வு மிக இனிதாகவும் சிறப்பாகவும் நடந்தேறியது.


**"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**
**தன்னை தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே "**

**திருச்சிற்றம்பலம்**



## திருமூலர் குருபூசை...

**(முதலாம் பக்க தொடர்ச்சி)**



திருக்கைலாயத்தில் சிவபெருமானது திருக்கோயிலுக்கு முதற்பெரும் காவல்பூண்ட திருநந்தி தேவரது திருவருள்பெற்ற, மாணாக்கரில் எண்வகைச் சித்திகளும் கைவரப்பெற்ற சிவயோகியார் ஒருவர் இருந்தார். அவர் அகத்திய முனிவரிடத்தில் கொண்ட நட்பினால் அவரோடு சிலகாலம் தங்குவதற்கு எண்ணி, அம்முனிவர் எழுந்தருளிய பொதியமலையை அடையும் பொருட்டுத் திருக்கயிலையினின்றும் புறப்பட்டுத் தென்னாடு நோக்கி பயணமாகிறார். பயணமாகி வருகின்ற வழியில் ஒரு பசுக்கூட்டம் கதறிக் கொண்டிருப்பதையும் அம் மந்தைக் கூட்டத்தின் நடுவில் இடையன் ஒருவன் இறந்து கிடப்பதையும் கண்டு வெம்பினார். பசுக்களின் துயரத்தினைப் போக்க எண்ணி தன்னுயிரினை அந்த மூலனின் உடலில் செலுத்தினார்.

உயிர்பெற்றெழுந்த மூலன், பசுக்களை மேய்த்து சென்று வீட்டில் விட்டார். அதன் பின்பு தன் உடலைத் தேடி வந்தார் ஆனால் உடலை காணவில்லை. எல்லாம் அவன் செயல் என்று எண்ணி மூலனின் உடலுடன் திருவாடுதுறை ஆதீனத்தில் துறவியாக அமர்ந்தார்.

இங்ஙனம் சிவயோக நிலையில் அமர்ந்திருந்த திருமூலநாயனார், ஊனோடு தொடர்ந்த இப்பிறவியாகிய தீய நஞ்சினாலுளவாம் துயரம் நீங்கி இவ்வுலகத்தார் உய்யும் பொருட்டு சரியை, கிரியை, யோகம் ஞானம் என்னும் நால்வகை நன்னெறிகளும் நால்வகை மலர்களாக விரிந்து விளங்கும் நல்ல திருமந்திரமாலையாகிய நூலை இறைவன் திருவடிக்கு அணிந்து போற்றும் நிலையில்,

**“ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்**
**நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந்தான் ஐந்து**
**வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழும்பர்ச்**
**சென்றனன் தானிருந் தானுணர்ந் தேட்டே”**

என்னும் திருப்பாடலைத் தொடங்கி ஓராண்டுக்கு ஒரு திருப்பாடலாக, இவ்வாறு மூவாயிரம் ஆண்டுகள் இவ்வுலகில் சிவயோக நிலையில் அமர்ந்திருந்து மூவாயிரம் திருப்பாடல்கள் அருளிச் செய்தார். “அண்ணல் அருளால் அருளுஞ் சிவாகமம் எண்ணில் இருபத்தெண் கோடி நூறாயிரம்” என்ற மற்றொரு பாடலால் அவர் எழுதியது பல கோடி பாடல்கள் என்பதும், நமக்கு கிடைத்தது மூன்றாயிரம் பாடல்கள் மட்டுமே என்பது ஆய்வாளர்களின் கருத்து. மேலும் தமிழிலே உள்ள முதல் நூலான திருமந்திரம் முதல் திருமுறையாக வைக்கப்படாமல், பத்தாம் திருமுறையாக வைத்துள்ளதும் சந்தேகத்துக்கிடமாய் உள்ளது என்பர் ஆன்றோர். எல்லாம் வல்ல பரம்பொருள் அன்பே உருவானவர் என்பதை,

**“அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்**
**அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்**
**அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்**
**அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே”** என்ற பாடல் மூலம் விளக்குகிறார்.

**“அழிகின்ற ஆண்டவை ஐயைஞ்சு மூன்று**
**மொழிகின்ற முப்பத்து மூன்றென்ப தாகும்**
**கழிகின்ற கால்அறு பத்திரண் டெண்ப**
**தெழுகின்ற ஈரைம்ப தெண்ணல் திருந்தே.”**

என்ற பாட்டின் மூலம் காலச்சக்கரத்தின் கணிப்புகளை அன்றே கணித்த, அரும்பெரும் மெய்ஞ்ஞானி எங்கள் திருமூல நாயனார் என்று கூறினால் மிகையாகாது.

ஒரு பாடல் அறிவியல், ஆன்மீகம், அன்பு என எல்லாவற்றையும் கலந்து பேசுகின்றது என்றால் அது திருமந்திரமே என்றும் எண்ணிப் போகலாம். வார்த்தைக்கு வார்த்தை அறிவியல் கொட்டிக்கிடக்கிறது. அத்தகு மூலனின் திருமந்திரம் எனும் அருந்தமிழ் முதுநூல், தமிழ் கூறும் நல்லுலகின் அறிவு பெட்டகம் என இயம்பலாம். திருமுறைகளில் ஒன்றான திருமந்திரத்தை தமிழ் ஆகமம் எனவும், மற்றையவற்றை தமிழ் வேதம் எனவும் சிறப்பித்து இருக்கின்றது.

தெய்வத்தமிழுக்கு கிடைத்த மிக ஆழமான அரிய பெருஞ்செல்வம் திருமந்திரம் என்னும் பெருநூல். ‘திருமந்திரமாலை’ என்று அந்நூலுக்கு திருமூலமுனிவர் பெருமான் பெயர் விளம்பினார். பத்தியோடு பார்க்கின்ற பொழுது அது ஓர் ‘பத்தி நூல்’, அறிவியலுடன் பொருத்திப் பார்க்கின்ற போது அது ‘அறிவியல் நூல்’, மெய்யியல் உடன் பொருந்திப் பார்க்கின்ற போது அது ‘மெய்யியல் நூல்’, தத்துவத்துடன் பொருத்தி பார்க்கின்ற பொழுது அது ஒரு **‘தத்துவ நூல்’**, சாத்திரத்துடன் பொருத்திப் பார்க்கையில் அது ஒரு ‘சாத்திர நூல்’, தோத்திரத்துடன் பொருத்திப் பார்க்கையில் அது ஒரு **‘தோத்திர நூல்’**, அத்துடன் ஆகமத்துடன் பொருத்திப் பார்க்கையில் அது ஒரு ‘ஆகம நூல்’, தமிழுடன் பொருத்திப் பார்க்கையில் அது ஒரு ‘தெய்வத்தமிழ் நூல்’. இத்தகு திருமந்திரத்தை தமிழ் பரப்பில் அள்ளித் தெளித்த திருமூலர் என்றென்றும் தமிழர் மத்தியில் நீங்காத தமிழ் முன்னோர் ஆவார்.

**உடம்பினை முன்னம் இழுக்கு என்று இருந்தேன்**
**உடம்பினுக்கு உள்ளே உறுபொருள் கண்டேன்**
**உடம்புளே உத்தமன் கோயில்கொண்டான் என்று**
**உடம்பினை யான் இருந்து ஓம்புகின்றேனே.**

**அணுவில் அணுவினை ஆதிப் பிரானை**
**அணுவில் அணுவினை ஆயிரம் கூறிட்டு**
**அணுவில் அணுவை அணுக வல்லார்கட்கு**
**அணுவில் அணுவை அணுகலும் ஆமே.**

**உடம்பார் அழியின் உயிரார் அழிவர்**
**திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவுமாட்டார்**
**உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே**
**உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே.**

போன்றன தமிழர் வாழ்வியலின் மெய்யியல் சான்றாக திருமூலர் எமக்களித்த திருப்பதிகங்கள் ஆகும்.

தமிழ் கூறும் சைவ நல் உலகம் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற முற்போக்கு வாதத்திலிருந்து அன்பே சிவம் என்ற அன்பியல் வாதம் வரை தன்னுடைய அலைகளை அடித்து ஓய்கின்றது திருமந்திரம். ஆண்டுக்கு ஒரு பாடல் வீதம் மூவாயிரம் பாடல்களை மூவாயிரம் ஆண்டுகள் பாடினார் திருமூலர் என்று அப்பெருமகனாரின் வரலாற்றை போற்றிச் செல்லலாம்.

**“குடிமன்னு சாத்தனூர்க் கோக்குல மேய்ப்போன் குரம்பைபுக்கு**
**முடிமன்னு கூனற் பிறையாளஃன் றன்னை முழுத்தமிழின்**
**படிமன்னு வேதத்தின் சொற்படி யேபர விட்டெனுச்சி**
**அடிமன்ன வைத்த பிரான்மூல நாகின்ற அங்கணனே”**

என்று திருமூலர் வரலாற்றை நம்பியாண்டார் நம்பிகள் திருத்தொண்டர் திருவந்தாதியில் சுருக்கமாய்க் கூறுகிறார்.

இவ்வாராக தமிழ் மூவாயிரமாகிய திருமந்திரத் திருமுறையினை நிறைவுசெய்து, சிவபெருமான் திருவருளாலே திருக்கயிலை அடைந்து, அம்முதல்வனுடைய திருவடி நீழலில் பேரின்பப் பெருவாழ்வினைப் பெற்று இணைந்தார்.

திருமூல நாயனார் முத்தி அடைந்த தலம் - திருவாவடுதுறை மாசிலாமணீசர் திருக்கோயில்

திருமூல நாயனார் குருபூசை - ஐப்பசித் திங்கள் புரவி (அச்சுவினி) நாண்மீன்

இம்முறையும் திருமூல நாயனாருடைய குருபூசை ஐப்பசித்திங்கள் 21ம் நாள் (07.11.2022) அன்று தென்னாடு ஐம்பூதநாதர் திருக்கோயிலில் சிறப்புப் பூசை வழிபாடுகளுடன் இடம்பெறும்.

**திருச்சிற்றம்பலம்**

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
**தென்னாடு - செந்தமிழாகம சிவமடம்,**
**கொக்குவில், யாழ்ப்பாணம்.**
+94 (70) 770 1111 | nilavan@thennadu.org

# தென்னாடு செந்தமிழாகம சிவமடமும்
# சைவ மாணவர் சபையும் இணைந்து நடாத்தும்
# திருவாசக கட்டுரைப் போட்டி

25-12-2022 அன்று நடைபெறவுள்ள “மார்கழிப் பெருவிழாவை“ முன்னிட்டு மேற்படி போட்டியானது இரு பிரிவுகளாக, சிவபூமியாம் இலங்கையில் மாணவர்கள் மத்தியில் சைவ சமய அறிவாற்றலை வளர்க்கும் மற்றும் மேம்படுத்தும் நோக்கத்துடன் தென்னாடு செந்தமிழாகம சிவமடமும் சைவ மாணவர் சபையும் இணைந்து, சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் அவர்களின் நினைவாக நடாத்தும் மாணவர்களிற்கான திருவாசகக் கட்டுரைப் போட்டி.

### கீழ்ப் பிரிவு

| | |
|---|---|
| **போட்டியாளர்கள்** | **- பாடசாலை மாணவர்களுக்கானது (தரம் 9 - 13)** |
| **தலைப்பு** | **- “முன்னைப் பழம் பொருள்”** |
| **கட்டுரையின் அளவு** | **- 700 சொற்கள்** |

### மேற்பிரிவு

| | |
|---|---|
| **போட்டியாளர்கள்** | **- பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி நிறுவன மாணவர்கள்** |
| **தலைப்பு** | **- “திருவெம்பாவை திருப்பாவை”** |
| **கட்டுரையின் அளவு** | **- 1000 சொற்கள்** |

பாடசாலை மாணவர்கள் அதிபர் மூலம் தமது சுய ஆக்கம் என்பதை உறுதிப்படுத்தியும், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் உயர் கல்வி நிறுவன மாணவர்கள் தமது கல்வி அங்கத்துவத்தை உறுதிப்படுத்தும் அடையாள அட்டைப் பிரதியை இணைத்தும் ஆக்கங்களை வருகின்ற கார்த்திகைத் திங்கள் 24ம் நாளிற்கு (10.12.2022) முன்னர் கிடைக்குமாறு சுய விபரங்களுடன் அனுப்பி வைக்க வேண்டும்.

**அனுப்பவேண்டிய முகவரி:**

**தென்னாடு செந்தமிழாகம சிவமடம்,**
**குளங்கரை வீதி,**
**கொக்குவில் கிழக்கு, கொக்குவில்,**
**யாழ்ப்பாணம்.**
+94 70 770 1111 / 021 221 2739

## பரிசில் விபரம்

### கீழ்ப் பிரிவு

**1ம் இடம் -10,000 ரூபாய்கள்**
**2ம் இடம் - 7,000 ரூபாய்கள்**
**3ம் இடம் - 5,000 ரூபாய்கள்**

### மேற் பிரிவு

**1ம் இடம் -15,000 ரூபாய்கள்**
**2ம் இடம் - 10,000 ரூபாய்கள்**
**3ம் இடம் - 7,000 ரூபாய்கள்**

**இரு பிரிவிலும் மேலும் 10 புத்தகப் பரிசில்கள் வழங்கப்படும்.**

போட்டி முடிவுகள் மார்கழித் திங்கள் 5ம் நாள் (20.12.2022) அன்று அறிவிக்கப்படும். பரிசில்கள் மார்கழிப் பெருவிழாவன்று வழங்கப்படும். நடைபெறும் இடம் பின்னர் அறிவிக்கப்படும். போட்டி முடிவுகள் தொடர்பான அனைத்து தீர்மானங்களும் தென்னாடு மடம் சார்ந்ததே. அத்துடன் ஆக்கத்தின் உறுதித் தன்மை தொடர்பாக சிலவேளைகளில் நேர்முகத்தேர்வும் இடம்பெறும்.

**திருச்சிற்றம்பலம்**

**“தென்னாடுடைய சிவனே போற்றி**
**எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி”**

# ஈழத்து சித்தர்கள்: தவத்திரு தருமன் சுவாமிகள்

## தன் முயற்சியால் தன்னை அறிந்த தருமன் சுவாமிகள்

சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன் நடந்த நிகழ்ச்சி. புதுவருடப் பிறப்பிற்குக் கதிர்காமம் செல்ல வேண்டும் என்ற ஒரு எண்ணம். ஏப்ரல் 11ம் திகதி பாடசாலை விடுமுறை. வருடப்பிறப்பு 13ம் திகதி. இந்தக் காலத்தைப்போல நினைத்த உடனே கதிர்காமத்தைச் சென்று அடையத்தக்க போக்குவரவு வசதியற்ற காலம். பாடசாலை விடுமுறை கொடுத்த அன்றே புறப்பட்டு வருடப்பிறப்பு அன்றே அதிகாலை சென்று அடையத்தக்கதாக பிரயாண வசதி அமைந்தது.

ஆடித்திருவிழா, திருக்கார்த்திகை விழா இக்காலத்தைத் தவிர மற்றைய நாட்களில் சனக்கூட்டம் மிகக் குறைவு. நான் சென்றபோது இருபத்தைந்து பேர்கூட இருந்திருக்க மாட்டார்கள். மாணிக்க கங்கையின் நீரோட்டம் மனதிற்கு மகிழ்வைக் கொடுத்தது. தனிமையில் முருகப் பெருமானை வேண்டுதல் செய்யும்போது உள்ளத்தில் என்றுமில்லாத ஒரு உருக்கம். அந்தச் சூழல் உணவைப் பற்றியோ, வேறு தேவைகளைப் பற்றியோ சிந்திக்க வேண்டாத நிலையை உண்டாக்கியது.

முருகன் திருக்கோயிலின் பின்னால் ஒரு பெரிய அரச மரம். அந்த அரச மரத்தை நாடிச் சென்றேன். பைத்தியக்கோலம் பூண்ட இளைஞர் ஒருவரைச் சந்தித்தேன். அவருக்குப் பக்கத்தே இன்னொரு இளைஞர் குறட்டைவிட்டுத் தூ ங்கிக் கொண்டிருந்தார். வயதால் இளைஞர், பார்ப்பவருக்குப் பைத்தியம்போல் தெரியலாம். காந்தக் கண்கள், முகத்தில் ஒரு பொழிவு, கண்களிலிருந்து கருணையைக் காட்டும் கண்ணீர். இத் திருக்கோலத்தை எத்தனை நாட்கள் பார்த்துக் கொண்டிருந்தாலும் அலுப்புத் தட்டாது.

நித்திரையாகக் கிடந்த இளைஞர் தூக்கங் கலைந்து எழுந்தார். “ஏ தருமு! எழும்படா குளிக்க நேரமாச்சு” என்று சொன்னார். இளைஞர் அதைக் கேட்டதாகத் தெரியவில்லை. அவர் ஒரு புது உலகத்தில் உலவுவதாக அவரது முகம் சொல்லியது. தருமுவின் உடலை உலுக்கினான் இளைஞன். அப்போது தான் இந்த உலகிற்கு வந்தான் தருமு.

அவர்களுடன் நட்பாக பேசி ஊர் பேர் எல்லாம் பரிமாறிக் கொண்டோம். சிவனொளிபாதமலை அடிவாரத்திலுள்ள வள்ளி மலைத்தோட்டத்தைச் சேர்ந்தவர்கள் அவ்விரு இளைஞரும். தருமு ஒரு கங்காணியாரின் மகன். மற்ற இளைஞராகிய வேலு ஒரு தொழிலாளியின் மகன். இருவரும் பாடசாலை நண்பர்கள். வேலுவின் தந்தை மெய்யப்பன் கங்காணியார் வீட்டில் உள்ள வேலைகள் எல்லாவற்றுக்கும் பொறுப்பானவர். உள்ளம் ஒன்றிய குடும்ப நண்பர்கள் என்றே கூறலாம்.

இளமை தொடங்கியே தருமுவுக்கு ஒரு சாமிப் பயித்தியம் என்று சொல்லிக் கொள்வார்கள். தருமுவோடு ஒத்த இளைஞர்களுடைய மனப்பாங்கு வேறுபட்டிருந்தது. விளையாட்டில் மனநாட்டம் இல்லை. கூத்து, சினிமா போன்ற கேளிக்கைகளில் கலந்து கொள்ளமாட்டான். இளைஞர்கள் சாதாரணமாகக் கோயிலுக்குச் சென்றால், அது ஒரு விளையாட்டு இடமாகவோ அன்றி சந்தைக் கடைகளாகவோ மாறிவிடும். தருமு இவை ஒன்றிலும் கலந்து கொள்ளாத மௌனியாக வாழ்ந்து வந்தான். வீட்டிலும் தான் உண்டு தன் பாடுண்டு என்ற வாழ்க்கை.

ஒருமுறை கங்காணியார் வீட்டிற்கு கதிர்காமத்திலிருந்து ஒரு சாது வந்திருந்தார். சிவனடியார்களை உபசரித்து அனுப்புவதே விதிப்பயன் என்று வாழ்ந்தவர் கங்காணியார். கங்காணியார் வீட்டிற்கு வராத சாதுக்களே இல்லை என்று சொல்லிவிடலாம். சிவனொளிபாதம் செல்லும் சாது யாத்திரிகர்கள் போகும்போதும், வரும்போதும் தங்குமடம் கங்காணியார் இல்லமாகும். தருமுவைப் பற்றிக் கவலையை சாதுவுக்கு கங்காணியார் கூறினார். சாது தருமுவின் உள்ளத்தை ஊடுருவிப் பார்த்தார். சாதுவின் முகம் மலர்ந்தது. “தருமுவுக்கு ஒன்றும் இல்லை. ஒரு திங்களிற்குக் கதிர்காமத்தில் இருப்பதற்கு அனுப்பி வையுங்கள். எல்லாம் சரியாகிவிடும்” என்று கூறிவிட்டு சாது தன்பாட்டிலே போய்விட்டார்.

தருமுவுக்கும் வீட்டுச் சூழலை விலகி இருக்க வேண்டும் என்றொரு துடிப்பு. தருமு கதிர்காமத்திற்குச் செல்ல வேண்டும் என்ற விருப்பைத் தெரிவித்தான். யார் துணைக்குப் போவது? ஒரு திங்களிற்கு தருமுவோடு யார் நிற்க முடியும் என்ற பிரச்சனை எழுந்தது. இத்தகைய சந்தர்ப்பத்தில் தான் மெய்யப்பனுடைய ஆலோசனைகள் பெரிதும் உதவின. “என் மகன் வேலு வீட்டில் சும்மாதானே இருக்கிறான். அவனை அனுப்பி வைக்கலாம்.” என்றான் மெய்யப்பன். எல்லாவிதத்திலும் வேலு தான் தகுதி உள்ளவன் என்று எல்லோரும் கருதினர். அவ்வாறே வேலுவும், தருமுவும் கதிர்காமத்தை அடைந்தனர். நான் செல்வதற்கு இரு தினங்களுக்கு முன்னரே அவர்கள் கதிர்காமத்தை வந்தடைந் திருந்தனர். அரச மரத்தடியில் இருவர் மூவரானோம்.

வேலு, மாணிக்க கங்கையில் நீராடத் தருமுவை அழைத்தான். தருமுவுக்கு அன்று நீராட வேண்டும் என்ற எண்ணம் உதிக்கவில்லை. வேலுவை அனுப்பிவிட்டு என்னோடு உரையாட வேண்டும் போலிருந்தது. “வேலு நீ போய் நீராடிச் சுவாமியை வணங்கிவிட்டு வா. நான் மத்தியானம் நீராடுகிறேன். உடல்நிலை இப்போ சரியில்லை” என்று கூறினான் தருமு. வேலு தன்பாட்டில் எழுந்துபோய் விட்டான். “தருமு! உனக்கு உள்ளத்தில் என்ன குறை?” என்று பேச்சை ஆரம்பித்தேன். “என் குறையை முருகன் தான் அறிவார். எனது குறை எல்லாம் தகுந்த ஒரு குருநாதன் கிடைக்க வேண்டும் என்பதுதான். **‘குருவாய் வருவாய் அருள்வாய் குகனே’** என்று தான் தினமும் வேண்டுதல் செய்கின்றேன்.” என்றான். இத்தெளிவான பேச்சு கல்லாய் இருந்த எனது நெஞ்சத்தையே உருக வைத்தது. “செல்லக்கதிர்காமத்தில் நான் அறிந்த ஒரு சாது இருக்கிறார். நான் இன்று மாலை செல்ல இருக்கின்றேன். என்னுடன் வந்தால் உமது கவலை எல்லாம் தீரும்” என்றேன். தருமுவின் உள்ளத்திலும் ஒரு மலர்ச்சி.

சாதுவை சந்திப்பதற்கு மூவருமாய் புறப்பட்டோம். சாதுவைத் தரிசிப்பதற்குச் செல்லும் போது வெறுங்கையுடன் செல்லக்கூடாது என்று நினைத்து, ஒரு விசுக்கோத்துப் பெட்டியும், ஒரு சீப்பு வாழைப்பழமும் வாங்கிக் கொண்டு சென்றோம். பெரியோரிடம், அரசனிடம், குருவிடம், குழந்தையிடம் செல்லும்போது வெறுங்கையுடன் செல்லக்கூடாது என்று சொல்வார்கள்.

முதலில் செல்லக் கதிர்காம விநாயகரைத் வணங்கிவிட்டு, சுவாமிகளுடைய பன்னசாலையை நோக்கி மூவரும் சென்றோம். நேரம் மாலை ஐந்து மணி இருக்கும். சுவாமிகள் தியானத்தில் இருந்தார்கள். மூவரும் விழுந்து வணங்கிவிட்டு ஒரு பக்கம் ஒதுங்கி இருந்தோம். சுவாமிகள் கௌபீன உடையுடன் முழு நீறு பூசிய முனிவராய் விளங்கினார். சுவாமிகள் கண் விழித்தார்கள். “வள்ளிமலை வள்ளலே வருக வருக” என்று அழைத்தார்கள். சுவாமிகளுக்கு தருமுவை அறிமுகம் செய்து வைக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

“தருமன் எவ்வளவு நல்ல பெயர். இன்று தருமத்திற்குத் தான் எவ்வளவு பஞ்சமாக இருக்கிறது. அதருமம் தான் தருமம் இருந்த இடத்தைப் பிடித்துக் கொண்டது. தம்மைக் கற்றவர்கள் என்று கொள்ளுபவர்கள், பெரிய பதவிகளை வகிப்பவர்கள் தருமத்தினின்று தவறிவிட்டார்கள். அவர்கள் செய்யும் அதருமங்களைத் தான் பாமரமக்கள் தருமம் என்று நினைக்கிறார்கள். இந்த ரீதியிலே வாழ்க்கை அமைந்தால் அதருமத்தின் இடத்திலே மக்கள் அடைக்கலம் புகுவது என்று ஆகிவிடும். பார்க்குமிடமெங்கும் அதருமமே நீக்கமற நிறைந்து நின்றால் தருமத்திற்குப் புகலிடமேது?”

இப்படி உபதேசம் செய்த சுவாமிகள், “அப்பா, அம்மா எல்லாரும் சௌக்கியமா?” என்று தருமுவைக் கேட்டார்கள். சுவாமிகள் நன்கு பழகியவராகக் காணப்படுகின்றாரே என்ற எண்ணம் தருமுவுடன் தலைதூக்கி நின்றது. தருமுவின் வீட்டிற்குச் சென்று, சில நாட்கள் தங்கி தருமுவைக் கதிர்காமத்திற்கு அழைத்த சுவாமிகளே கௌபீனதாரியாக இருக்கிறார் என்ற தெளிவு இப்போது தான் ஏற்பட்டது. முருகப் பெருமானே இத்திருக்கோலத்தில் வந்து ஆட்கொண்டார் என்று தருமு கண்ணீர் பெருக்கினான்.

“குழந்தாய்! உனது வாழ்வின் குறிக்கோள் என்ன?” என்று வினவிய சாது, “உனக்கு என்ன தான் குறைவு உண்டு. நல்ல அப்பா, நல்ல அம்மா, நல்ல குடும்பத்தில் பிறந்துள்ளாய், சாப்பாட்டுக்குக் குறைவில்லை. அப்பாவின் சொல்லைக் கேட்டு ஏதாவது ஒரு தொழிலைப் பார்த்துக் கொண்டு ஆனந்தமாக வாழ்வதுதானே!” என்று சுவாமிகள் அறிவுரை கூற, வாய்விட்டுத் தன் குறைகளைக் கூறி அழுவதற்கு இப்பொழுதுதான் தருமனுக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. அவனையும் அறியாது கண்களினின்று நீர் பெருகி வழிந்தது. உரத்த குரலில் “சுவாமி!” என்று விளித்தான். நெஞ்சோ அடைத்தது, என்றாலும் வந்த அழுகையை அடக்கிக் கொண்டு பேசினான்.

“வாழ்க்கைப் பயனைப் பெறுவதே என் அவா. தங்களிடம் மறைப்பானேன்? தாங்கள் அறியாததா? பல இடங்கட்கும் சென்றேன். பல பெரியோர்களையும் நாடினேன். இவ்வற்பனை ஏற்று அருள்புரிய எவரும் விரும்புவதில்லை. தங்கள் திருவடிகளை அடைந்துள்ளேன். இவ் ஏழைக்குத் தங்கள் கருணைப் பார்வை கிட்டுமா?” என்று சொல்லிவிட்டு கால்களில் விழுந்து அழத் தொடங்கினான்.

சாது தருமனை அன்புடன் இரு கைகளாலும் பிடித்து எழுப்பினார். ஆறுதலடையுமாறு கூறினார். சிறிதுநேரம் கழிந்தது. சுவாமிகள் மூவரையும் கையமர்த்தி இருக்கச்செய்தார். “தருமு! வாழ்க்கைப் பயன் என்பது நான் எடுத்து உன் கைகளில் கொடுத்துவிடக்கூடிய ஓர் பொருளல்ல. தன்னுடைய நலனைத் தானே முயன்று பெற்றாக வேண்டும். பிறர் பாதையைக் காண்பிக்கத்தான் முடியும். முயற்சியை மற்றவர்கள் செய்யப் பயன் மட்டும் உனக்குக் கிடைக்குமா? நீ உன் முயற்சியையே நம்பியிருக்க வேண்டும். முதலில் உன் மனதை விட்டு ஏனைய தீய எண்ணங்களையும் அகற்றி அதைத் தூய்மை பெறச் செய். ஆராய்ச்சி முறைகளால் மனதிலுள்ள பற்றுதல்களையெல்லாம் நீக்கிவிடு. பரம்பொருளை எவ்வகையிலாயினும் அண்டி மனதை அதிலேயே செலுத்தப்பழக்கு. இன்பப் பற்றுகள் அகன்றதும், மனம் ஒருமையைப் பெறும். அந்நிலையில் உண்மைப் பொருளை எளிதில் காண்பாய். பேரின்பமும் பெறுவாய்!” என்றும் உபதேசித்தார்.

தருமன் விரிவாக உபதேசங்களைப் பெறவிரும்பினான். சாதுவும், உலக வாழ்வு உண்மையல்ல என்பதையும், இன்பப் பொருள்களைச் சேமிக்கச் சேமிக்கத் துன்பமே கிட்டுகிறது என்பதையும், வெறுப்பை மனதில் பயிலுவதனால் உண்மை இன்பம் எப்படிக் கிடைக்கின்றதென்பதையும் கூறிவிட்டு, தருமனுடைய மன உறுதிக்கேற்றவாறு பேரின்பம் பெறுதற்கேற்ற முறைகளையுங் கூறினார்.

“மறுபடியும் தங்களை எப்போது எங்கே பார்ப்பேன்?” என்று தருமன் வினவச் சாது, “எதற்காக என்னைக் காணும் அவா? பரம்பொருளைக் காண்பதற்கன்றோ அவா இருக்க வேண்டும். என்னிடம் எந்த உதவியை எதிர்பார்க்கின்றாயோ, அவ்வுதவியையும் அப்பரத்தினிடமே எதிர்பார்த்து இரு. எல்லா இடையூறுகளும் அவன் எதிரில் மறைந்துவிடும். உன் விருப்பமும் கைகூடும். என் உதவியை மறந்துவிடு” என்று கூறினார் சாது.

மூவரும் விழுந்து வணங்கி விடைபெற்றுத் திரும்பினோம். முருகன் திருக்கோயிலுக்கு வந்தோம். முருகப்பெருமானை வாயார வாழ்த்தினோம். வருடப்பிறப்பில் அன்று முருகன் திருக்காட்சியும், சாதுவின் அருளாசியும் கிடைத்ததை நினைந்து நினைந்து இன்புற்றோம். ஆண்டுமுழுவதும் இந்த இன்பம் நிலைத்து நிற்க வேண்டும் என்று ஏங்கினோம். முருகன் சந்நிதியில் அடியற்ற மரம்போல் விழுந்தோம். விடைபெற்றோம்.

தனியாகச் சென்ற எனக்கு இருபக்கத்துணைகள். அவர்களுடைய வற்புறுத்தலின்பேரில் வள்ளிமலைத் தோட்டம் சென்று, கங்காணியாரின் வீட்டில் இருநாட்கள் அவர்களுடைய உபசாரத்தில் திளைத்திருந்தேன். இருநாட்களும் தருமுவினுடைய, உள்ள நிலையை பெற்றோருக்குத் தெளிவுபடுத்தும் வாய்ப்புக் கிடைத்தது. தருமுவின் உள்ள நிலையைப் புரிந்து கொண்டு, அவருடைய சாதனைக்கு இடையூறில்லாமல் வாழ்வதாக உறுதி அளித்தனர். அவர்களிடமிருந்து விடைபெறும்போது தருமு முகமெலாம் கண்ணீர்வார “நீங்கள் தான் என் முதல் குரு” என்று நாத்தழுதழுக்கக் கூறினார். அவரைத் தழுவி குருவருளும் திருவருளும் உமக்குக் கிடைத்துவிட்டது. இனி ஒரு குறையுமில்லை என்று கூறி விடைபெற்றுக் கொண்டேன்.


(அடியாரின் பயணம் தொடரும்)

திருச்சிற்றம்பலம்

ஆக்கம் : ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள்
தொகுப்பு : சிவத்திரு.வடிவேலு கங்காளன்

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று:

# எம்பிரான் திருஞானசம்பந்தன்



### அனல் வாதம்

பாண்டிய மன்னன், தன்னிடத்துள்ள வெம்மை முழுவதும் நீங்கியதனால் உண்டான பெரிய இன்பத்தை அடைந்து, தலையின்மீது கைகளைக் குவித்துக் கொண்டு ஹமானம் ஒன்றுமில்லாத சமணர்கள் முன்னே, வலிய நோய் நீங்குமாறு வந்தருளிய ஞான சம்பந்தரின் திருவடிகளைச் சேர்ந்து நான் உய்ந்தேன்!' எனக் கூறிப் போற்றினன். தருக்க வாதத்தால் சம்பந்தரை வெல்ல முடியாதென முடிவு செய்த பின்னர், சம்பந்தரிடம், "கட்புலனால் நம் சமயக் கருத்துக்களைக் காணும் வண்ணம் காட்டி வெல்லலாம். அவரவர் தத்தம் கொள்கைகளை ஏட்டில் எழுதித் தீயில் இடுவோம். எவர் ஏடு எரியாதிருக்கிறதோ அவரே வென்றவர்" என்றனர். சம்பந்தர் அதனை ஏற்றுக் கொண்டார்.

சம்பந்தர் திருமுறைச் சுவடியை எடுத்துப் பிரித்து ஓர் ஓலையை எடுத்தார். அதில் அவர் திருநள்ளாற்று இறைவனைப் பாடிய, **"போகமார்த்த பூண் முலையாள்"** எனத் தொடங்கும் பாடல் எழுதப்பட்டிருந்தது. நன்மையில் செலுத்தும் மெய்யான அப்பதிகத்தால் போற்றப்பட்ட இறைவன் என்று எடுத்துக் கொண்டு, என்னை ஆளாக உடைய இறைவரின் நாமமே எப்போதும் நிலைபெறும் பொருளாம் எனக் காட்டும்படி, ஹதீயில் வேகாது இருப்பதாகுக!' என்று,


**தளிரிள வளரொளி தனதெழி றருதிகழ் மலைமகள்**
**குளிரிள வளரொளி வனமுலை யிணையவை குலவலின்**
**நளிரிள வளரொளி மருவுநள் ளாறர்தந் நாமமே**
**மிளிரிள வளரெரி யிடிலிவை பழுதிலை மெய்ம்மையே.**

எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடி, சம்பந்தர் அந்த ஏட்டினை அரசவையில் எரிந்து கொண்டிருந்த தீயினில் இட்டார். தீ அவ்வேட்டினை எரிக்கவில்லை. அதனைத் தீயினின்று எடுத்தபோது அது பச்சையாகவே இருந்தது. பின்னர் அப்பதிகம் **'பச்சைப் பதிகம்'** எனப்பட்டது.

அச்சம் கொண்ட உள்ளம் உடையவர் ஆயினும் அதனால் அறிவு பெறாத சமணர்கள், வெம்மையான தீயில் இட்ட ஏடு நெருப்பிலிட்ட பஞ்சென அழிந்ததைக் கண்டு, அச்சத்தினால் மனம் தளர்வடைந்த பின்பும், கையில் ஏந்திய மயிற்பீலியை விடாதவராய் நின்றனர்.

### புனல்வாதம்

அனல் வாதத்தில் தோத்த சமணர்கள் இன்னொரு வாதம் செய்ய வேண்டும் என்றனர். அரசன் மறுத்தும் சமணர் கேட்கவில்லை. சம்பந்தர், என்ன வாதம்? என்று கேட்டார். அவர்கள், "நாம் இருவரும் நம்முடைய கருத்துக்களை ஏட்டில் எழுதி வைகை ஆற்றில் இட வேண்டும். எவர் ஏடு நீரோடு செல்லாது நிற்கிறதோ அவரே வென்றவர்" என்றனர். சம்பந்தர் அவர்களின் கூற்றை ஏற்றுக் கொண்டார். "இந்தச் சோதனையில் தோற்றால் உங்களுக்கு என்ன தண்டனை?" என்று அமைச்சர் கேட்டார். "தோற்றால் நாங்கள் அனைவரும் கழுவேறுவோம்" என்று சமணர் கூறினர்.



அனைவரும் வைகைக் கரைக்கு வந்தனர். சமணர் "அத்தி நாத்தி" எனும் தம் மூல மந்திரத்தை ஓர் ஏட்டில் எழுதி ஆற்றில் இட்டனர். அந்த ஏடு ஆற்று நீரோடு சென்று மறைந்துவிட்டது.

**"வாழ்க அந்தணர், வானவர், ஆனினம்**
**வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக**
**ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே**
**சூழ்க, வையகமும் துயர் தீர்கவே"**

எனும் பாசுரத்தைப் பாடி, ஏட்டில் எழுதி வைகை ஆற்றில் இட்டார். அவ்வேடு நீரைக் கிழித்துக் கொண்டு எதிரேறிச் சென்றது.

ஏடு நிற்குமாறு சம்பந்தர் பாடினார். திருவேடகம் எனுமிடத்தில் ஏடு நின்றது. குதிரையிற் சென்று குலச்சிறையார் அதனை எடுத்து வந்தார். "வேந்தனும் ஓங்குக" எனப்பாடியதால் பாண்டிய மன்னனும் கூன் நிமிர்ந்து நின்ற சீர் நெடுமாறன் ஆனான். சமணர்கள் தாங்கள் முன்பே உரைத்தபடி கழுவேறினர்.

**திருச்சிற்றம்பலம்**

மூலம் - திருஞானசம்பந்தர் வாழ்வியல் அற்புதங்கள்
- டாக்டர் சு. உமாமகேஸ்வரி

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
**தென்னாடு - செந்தமிழாகம சிவமடம்,**
**கொக்குவில், யாழ்ப்பாணம்.**
+94 (70) 770 1111 | nilavan@thennadu.org

# ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்-

## அருள்மிகு ஏழவார் குழலியம்மை(காமாட்சி) உடனுறை ஏகாம்பரநாதர் திருக்கோயில் – திருக்கச்சி ஏகம்பம் (காஞ்சிபுரம்)

## (தேவாரப் பாடல்பெற்ற 274 சிவபுரங்களில் 03ஆவது திருக்கோயில் – திருக்கச்சி ஏகம்பம்)



சிவபூசையின் முக்கியத்துவத்தை உணர்த்த பரம்பொருளே, மதுரையில் சோமசுந்தர பாண்டியனாக வந்து தம்மைத் தாமே வழிபட்டார். அதுபோல பிறவா யாக்கை பெரியோனின் துணைவியாரான காமாட்சி அம்பாள் மண்ணால் சிவலிங்கம் செய்து சிவபூசனை ஆற்றிய திருத்தலமே, அருள்மிகு ஏழவார் குழலியம்மை உடனுறை ஏகாம்பரநாதர் திருக்கோயிலாகும். ஐம்பெரும் பூதத்தலங்களில் இது மண்தலமாகும்(நிலம்). சுந்தரமூர்த்தி நாயனார் பாவம் நீங்கப்பெற்று பார்வை பெற்ற திருத்தலமும் இதுவேயாகும். இங்கு தைத்திங்கள் எழுமைப் பிறைநன்னாளில் கருவறை இலிங்கத்தின் மீது சூரிய ஒளி விழுகின்றமையும் சிறப்பு பெறுகின்றது. மேலும் ஒற்றை மாமரம், இம்மரம் சுமார் 3500 ஆண்டுகளுக்கு முந்தையது. நான்கு வேதங்களை நான்கு கிளைகளாகக் கொண்ட, இத் திருவருள் மாமரம் இனிப்பு, புளிப்பு, துவர்ப்பு, கார்ப்பு ஆகிய நால்வகைச் சுவைகளை கொண்ட கனிகளைத் தருகிறது.

**அமைவிடம் :** **காஞ்சிபுரம் மாவட்டம், தமிழ்நாடு**

காஞ்சிபுரம் தொடர்வண்டி நிலையத்திற்கு மேற்கே சுமார் 2.5 கி.மீ. தூரத்தில் இருக்கின்றது. சென்னை, செங்கற்பட்டு, திண்டிவனம், அரக்கோணம், வேலூர் முதலிய பல நகரங்களிலிருந்தும் பேருந்துகள் உள்ளன.

**இறைவர் திருப்பெயர்:** **ஏகாம்பரநாதர், ஏகாம்பரேசுவரர்.**
**இறைவியார் திருப்பெயர்:** **ஏழவார் குழலியம்மை, காமாட்சி அம்பாள்.**
**கோயில் மரம்:** **மாமரம் (ஒற்றை மரம்)**
**தீர்த்தம்:** **சிவகங்கை.**
**வழிபட்டோர்:** **காமாட்சி அம்பாள், திருமால், சுந்தரர், இராமர் முதலியோர் இறைவனை வழிபட்டுப் பேறு பெற்ற தலம்.**
**பாமாலை:** **அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர், பட்டினத்தடிகள்**

**திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அருளிச் செய்தது (1-133, 2-12, 3-41, 3-114)**

**மறையானை மாசிலாப் புன்சடை மல்குவெண்**
**பிறையானைப் பெண்ணொடு ஆணாகிய பெம்மானை**
**இறையானை யேர்கொள்கச் சித்திரு ஏகம்பத்து**
**உறைவானை யல்லஉள்காது எனது உள்ளமே - (2-12)**

**அப்பர் சுவாமிகள் அருளிச் செய்தது (4-7, 4-44, 4-99, 4-47, 5-47, 6-64, 6-65)**

**பண்டு செய்த பழவினையின் பயன்**
**கண்டுங் கண்டுங் களித்திகாண் நெஞ்சமே**
**வண்டு உலாமலர்ச் செஞ்சடை ஏகம்பன்**
**தொண்டனாய்த் திரியாய் துயர்தீரவே - (5-47)**

**சுந்தரர் அருளிச் செய்தது (7-61)**

**ஆலம்தான் உகந்து அமுது செய்தானை**
**ஆதியை அமரர் தொழுதேத்தும்**
**சீலம் தான்பெரிதும் உடையானைச்**
**சிந்திப்பார் அவர் சிந்தையுள் உள்ளானை**
**ஏலவார் குழலாள் உமை நங்கை**
**என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற**
**கால காலனைக் கம்பன் எம்மானைக்**
**காணக்கண் அடியேன் பெற்ற வாறே**

### திருத்தலச் சிறப்பு

காமாட்சி அம்பாள் பூசித்த மணல் சிவலிங்கமே கருவறையில் வைத்து இன்றுவரை வழிபடப்படுகின்றது. அம்பாள் கட்டியணைத்தற்கான தடம் இன்னும் சிவலிங்கத்தில் காணப்படுகின்றமை சிறப்பாகும்.

சுந்தரரருக்கு இடக்கண் பார்வை வழங்கல்: கைலாயத்தில் உமையம்மைக்கு தொண்டு செய்த அனிந்திதை, பூலோகத்தில் ஞாயிறு எனும் தலத்தில் சங்கிலியார் என்ற பெயரில் பிறந்து சிவபணி செய்து கொண்டிருந்தாள். சிவத்தல யாத்திரை சென்ற சுந்தரர் இத்தலத்திற்கு வந்தபோது சங்கிலியாரை இரண்டாவது மனைவியாக மணந்து கொண்டார். திருமணத்தின்போது அவரைவிட்டு பிரிந்து செல்ல மாட்டேன் என்று மகிழமரத்தின் சாட்சியாக சத்தியம் செய்து கொடுத்தார். ஆனால் அவர் சத்தியத்தை மீறி திருவாரூருக்கு சென்றதால் கண் பார்வையை இழந்தார்.

பார்வையில்லாத நிலையிலும் சிவத்தலயாத்திரையை தொடர்ந்த சுந்தரருக்கு திருவெண்பாக்கத்தில் ஊன்றுகோல் கொடுத்த சிவன், இத்தலத்தில் இடது கண் மட்டும் தெரியும்படி அருள்செய்தார் (திருக்கச்சூர் - ஊன்றுகோல், காஞ்சி - இடக்கண், திருவாரூர் - வலக்கண்). எனவே, இத்தலத்தில் வேண்டிக் கொண்டால் அறியாமல் செய்த தவறுக்கு மன்னிப்பு கிடைக்கும், கண் தொடர்பான நோய்கள் நீங்கும் என்பது நம்பிக்கை.

**மணல்த்தலம்:** இத்திருக்கச்சி ஏகம்பம் ஐம்பெரும்பூத தலங்களில் முதன்மையான மணல் (நிலம்) தலமாகும். கருவறையில் சுவாமி மணல் இலிங்கமாகவே இருக்கிறார். இவருக்கு புனுகு மற்றும் வாசனைப்பொருட்கள் பூசி வெள்ளிக்கவசம் சாத்தி வழிபடுகின்றனர். திருமஞ்சனங்கள் ஆவுடையாருக்கே நடத்தப்படும்.

சிவன் இத்தலத்தில் அம்பாளுக்கு அருள்புரிவதற்காக கங்கையையும், ஆலகால விடத்தின் வீரியத்தால் கருப்பு நிறமாக மாறிய திருமாலை குணப்படுத்த தலையை அலங்கரிக்கும் பிறைச்சந்திரனையும் பயன்படுத்தியிருக்கிறார். தன் திருமுடியில் இருக்கும் கங்கை, சந்திரன் இருவருக்கும் சிவன் இத்தலத்தில் பணி கொடுத்திருப்பது சிறப்பு.

தைத் திங்கள் எழுமைப் பிறைநன்நாளில் இவ்லிங்கத்தின் மீது சூரிய ஒளி விழுகின்றமை சிறப்பு. இந்நாளில் சுவாமியை வணங்கினால் பாவங்கள், கழுவாய்கள் நீங்கும் என்பது நம்பிக்கை. இத்திருக்கோயில் வீதியில், வைணவர்கள் முக்கியமாக கருதப்படும் திவ்விய தேச தலமான நிலாத்துண்ட பெருமாள் சந்நிதி இருப்பதும் மிகச் சிறப்பு.

**ஒற்றை மாமரம்:** ஏகாம்பரேசுவரர் கருவறைக்கு பின்புறம் வீதியில் மாமரம் ஒன்று உள்ளது. இம்மரத்தின் அடியில் சிவன், அம்பாளுடன் அமர்ந்த கோலத்தில் சோமசுகந்த வடிவில் இருக்கிறார். அம்பாள் நாணத்துடன் தலை கவிழ்ந்தபடி சிவனை நோக்கி திரும்பியிருக்கிறார். இதனை சிவனது ‘திருமணகோலம்’ என்கிறார்கள். அம்பாள் தவம் செய்தபோது, சிவன் இம்மரத்தின் கீழ்தான் காட்சி தந்து மணம் முடித்தாராம். இதனை வேத மாமரம் என்றும் அழைப்பர். இம்மரத்தின் பெயராலேயே சுவாமி ‘ஏகாம்பரேசுவரர்’ (ஏகம் - ஒரு ஆம்ரம் - மரம்) எனப்படுகிறார். மாமரத்தைத் தலமரமாகக் கொண்டுள்ளமையால் இப் பெயர்பெற்றது. ஆம்ரம் என்பது வடசொல், அது தமிழில் வழங்கும்போது, தமிழ் இலக்கணத்திற்கு ஒத்தவாறு மகரத்துக்கு இனமாகிய பகரத்தைப்பெற்று ஆம்பரம் என்று ஆயிற்று. மகரத்தின் பின் ரகரம் தமிழில் மயங்காது. ஆம்ரம் என்பது ஏகமென்னும் சொல்லொடு புணர்ந்து ஏகாம்பரம் என்று (வடமொழி விதிப் படி) ஆயிற்று. ஏகாம்பரம் என்பது ஏகம்பம் என்றும், கம்பம் என்றும் மருவிற்று.

இம்மரம் சுமார் 3500 ஆண்டுகளுக்கு முந்தையது. மிகவும் புனிதமானது. நான்கு வேதங்களை நான்கு கிளைகளாகக் கொண்ட இத் தெய்வீக மாமரம் இனிப்பு, புளிப்பு, துவர்ப்பு, கார்ப்பு ஆகிய நால்வகைச் சுவைகளை கொண்ட கனிகளைத் தருகிறது. மக்கட்பேறு இல்லாதவர்கள் இம்மாமரத்தின் கனியை புசித்தால் புத்திர பாக்கியம் கிடைக்கும் என்பது நம்பிக்கை.

**நிலாத்துண்ட பெருமாள் (திவ்ய தேசம்):** திருப்பாற்கடலில் அமிர்தம் கடைந்தெடுக்கும் காலத்தில் திருமால் மேல் ஏற்பட்ட வெப்பம் நீங்குவதற்கு ஈசான பாகத்தில் தியானம் செய்து சிவபெருமானுடைய சிரசிலிருந்து சந்திர ஒளி திருமால் மேல் பட்டு வெப்பம் நீங்கி, சாந்தி அடைந்ததால் நிலாத்துண்ட பெருமாள் எனும் பெயர் பெற்றார்.

### திருத்தல வரலாறு

கைலாயத்தில் சிவன் யோகத்தில் இருந்தபோது, அம்மையார் அவரது இரண்டு கண்களையும் விளையாட்டாக தன் கைகளால் மூடினார். இதனால் கோள்கள் இயங்கவில்லை. சூரியனும் உதிக்கவில்லை. உலகம் இருண்டு இயக்கம் நின்றது. தவறு செய்துவிட்டதை உணர்ந்த அம்பாள் சிவனிடம், தன்னை மன்னிக்கும்படி வேண்டினார். எனவே பூமியில் தன்னை எண்ணி தவம் செய்து வழிபட நிவர்த்தி கிடைக்கும் என்றார் பரம்பொருள். அம்பாள் தவம் செய்ய ஏற்ற இடத்தை கேட்க, இத்தலத்திற்கு அனுப்பினார்.

இங்கு வந்த அம்பாள் ஒரு மாமரத்தின் அடியில் மணலால் இலிங்கத்தை பிடித்து வைத்து ஐம்பெரும் தீ வளர்த்து மத்தியில் நின்றபடி தவம் செய்தார். அவரது தவத்தை சோதிக்க எண்ணிய சிவபெருமான் தன் தலையில் குடிகொண்டிருக்கும் கங்கையை பூமியில் ஓடவிட்டார். கங்கை வெள்ளமாக பாய்ந்துவர தான் பிடித்து வைத்த இலிங்கம் கரைந்துவிடும் என அஞ்சிய அம்பாள் இலிங்கத்தை மார்போடு அணைத்துக் கொண்டு காத்தார். அம்பாளின் பத்தியில் மகிழ்ந்த சிவபெருமான், அம்மையாருக்கு காட்சி தந்து பாவத்தை மன்னித்தருளி, அம்பாளை திருமணம் செய்துகொண்டார். அம்பாள் அணைத்த சிவன் என்பதால் சுவாமிக்கு ‘தழுவக்குழைந்த நாதர்’ என்ற பெயரும் இருக்கிறது.

### திருக்கோயில் அமைப்பு

ஐம்பெரும் பூதத்தலங்களில் மணலத்தலமாக இருக்கும் இங்கு, காமாட்சி அம்பாள் பூசித்த மணல் சிவலிங்கமே கருவறையில் வழிபடப்படுகின்றது. ஏகாம்பரேசுவரர் கருவறைக்கு எதிரே வீதியில் படிக இலிங்கம் மேற்கு பார்த்தும், எதிரே படிகத்திலேயே நந்தியும் இருக்கிறது. தைத்திங்கள் எழுமைப் பிறைநாளில் இலிங்கத்தின் மீது சூரிய ஒளி விழுகின்றமை இக்கோயிலில் சிறப்பு பெறுகிறது. 3500 ஆண்டுகளுக்கு முந்தைய ஒற்றை மாமரம் கருவறைக்கு பின்னே காணப்படுகின்றது. எழுந்தருளல் திருமேனியான ஏகாம்பரேசுவரர் தனிச்சன்னதியில் கண்ணாடி அறையில் உருத்திராக்கப் பந்தலின் கீழ் இருக்கிறார். 5008 உருத்திராக்கங்களால் வேயப்பட்ட பந்தல் இது. இக்கண்ணாடியில் உருத்திராக்கத்துடன், எல்லையற்ற சிவனது உருவத்தையும் வணங்கலாம். இத்திருக்காட்சி பிறப்பில்லா நிலையை அருளக்கூடியது என்கிறார்கள்.

படிகம் சிவனுக்கு உகந்தது. குளிர்ச்சியை தரக்கூடியது. இந்த லிங்கத்திடம் வேண்டிக்கொண்டால் பொலிவான தோற்றம் பெறலாம், மனதில் தீய குணங்கள் நீங்கும் என்பது



நம்பிக்கை. இந்த இலிங்கத் திருக்கட்சியானது பேரருள் மிக்கதாகும். இராமர் கொலைப்பாவ கழுவாய் (பிரம்மகத்தி தோசம்) நீங்க வழிபட்ட சகட்சரலிங்கம் (1008) மற்றும் அட்டோத்திர (108) இலிங்கங்களும் இங்கு இருக்கிறது. இந்த இலிங்கத்திடம் 108 விளக்கு ஏற்றி வழிபடுகின்றமை சிறப்புப் பெறுகிறது. கச்சியப்ப சிவாச்சாரியார் இத்தலத்தில் தான் ‘கந்த புராணத்தை’ இயற்றினார். பின் அருகில் உள்ள குமரகோட்டம் முருகன் கோயிலில் அரங்கேற்றம் செய்தார்.

மிகவும் அழகிய மண்டபங்கள், சுற்றுவீதிகளையும் கொண்ட கோயில் இது என்பதால் சுற்றுலா பயணிகள் அதிகம் வருகின்றனர். அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வராலும் தேவாரப்பாடல் பெற்ற திருத்தலம் ஆகும். இவை தவிர பெரிய புராணம் போன்ற புராண இலக்கியங்களிலும் இத்தலம் ஏராளமாக பாடப்பெற்றுள்ளது. இத்தல விநாயகர் ‘விகடசக்கர விநாயகர்’ என்ற திருநாமத்துடனும், முருகன் ‘மாவடி கந்தர்’ என்ற திருநாமத்துடனும் நிலைபெறுகின்றனர். இங்குள்ள இராசகோபுரம் 9 நிலைகளைக் கொண்டு காணப்படுகின்றது.

இங்கு பங்குனி உத்திர பெருவிழா 13 நாட்கள் சிறப்பாக நடைபெறும். வெள்ளி இரதம், வெள்ளி மாவடி சேர்வை, தங்க இடபம் ஆகியவை விசேடம். இத்திருவிழாவில் இலட்சக்கணக்கான பத்தர்கள் கோயிலில் கூடுவர். நிறைமதி, மறைமதி, கழுவாய் வழிபாடுகளில் கோயிலில் பத்தர்களின் வருகை பெருமளவில் இருப்பது சிறப்பு. தெய்வத்தமிழ் வருடபிறப்பு, தைப்பொங்கல் ஆகிய விசேட நாட்களில் சுவாமிக்கு சிறப்புத் திருமஞ்சன வழிபாடுகள் நடைபெறும். இத்தலத்தில் அம்பாள் வேண்டி சித்தி பெற்றதால் திருமணவரம், குழந்தைவரம் வேண்டி பலரும் இங்கு வழிபாடு ஆற்றுகின்றனர்.

**“திரு ஏகம்பத்து உறைவானை யல்ல உள்காது எனது உள்ளமே”**

**திருச்சிற்றம்பலம்**

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
**தென்னாடு - செந்தமிழாகம சிவமடம்,**
**கொக்குவில், யாழ்ப்பாணம்.**
+94 (70) 770 1111 | nilavan@thennadu.org

# சிவபூமியில் சிவனைத் தேடி

## மட்டக்களப்பு பேத்தாழை பாலீசுவரர் சிவன் கோயில்

ஆறும் கடலும் இயற்கையாக ஒன்று சேர்ந்த மட்டக்களப்பு தேசம் தனியான ஒரு வரலாற்றுப் பாரம்பரியம் மிக்கதாக அன்றுதொட்டு இன்று வரை நிலைபெற்று விளங்குகின்றது. மட்டு தேசம் பதினான்கு பிரதேச செயலகப் பிரிவுகளைக் கொண்டது. இதில் கோறளைப்பற்று மிகப் பெரிய பிரதேசமாகும். இவற்றுள் ஒரு தனிப் பிரதேசமாக வடக்கு, தெற்குப் பகுதிகளை இணைத்த ஓர் பழங்கிராமமாக விளங்குவது பேத்தாழையாகும். சைவமும், தமிழும் ஒன்றாய்க் குழுமிச் சிறக்கும் இவ்வூரில் சைவசமயத்தின் பெருமையைப் பறைசாற்ற, அருள்மிகு பாலாம்பிகை உடனுறை பாலீசுவரப் பெருமான் அடியார்களுக்கு அருள் சுரந்து வருகின்றார்.



இவ் ஆலயம் மட்டக்களப்பு நகரில் இருந்து ஏறத்தாள 40 கிலோ மீற்றர் தூரத்தில், வாழைச்சேனையிலிருந்து, இலங்கையில் புகழ் பெற்ற சுற்றுலா இடமாகிய பாசிக்குடா செல்லும் வழியில் அமைந்துள்ளது.

எழுவான் கரைக்கு பொலிவூட்டும் ஊர்களில் பேத்தாழையும் ஒன்று. ஆறும், குளமும், கடலும் சூழ்ந்த நிலப்பரப்பில், தென்னை, கமுகு, வேம்பு, வம்மி, நாகலிங்க மரங்கள் நிறைந்த சூழலில், தாழம்பூ கமகமக்கும் தாழை



மரங்கள் அதிகம் காணப்படும் ஊராகவும் சிறப்புப் பெறுகின்றது. தாழை மரங்கள் இவ்வூரில் அதிகம் காணப்படுவதால் தாழை என்னும் தாவரத்தின் பெயர் கிராமப் பெயரின் கடையாக ஒட்டியுள்ளது.

**இறைவன் திருப்பெயர்: பாலீசுவரர்**
**இறைவியர் திருப்பெயர்: பாலாம்பிகை**
**கோயில் மரம்: ஆல மரம்**
**தீர்த்தம்: இந்து சமுத்திரம்**

### திருக்கோயில் வரலாறு

இவ்வாறு மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய முச்சிறப்புக் களுடன் கூடிய இவ்வாலயம் ஏறத்தாள நாற்பது வருடங்கள் பழமை வாய்ந்தது. இவ்வாலயத்தின் தொன்மம் பற்றி இக்கிராமத்தவர்களிடம் ஓர் கர்ண பரம்பரைக் கதை செவிவழியாகப் பேசப்பட்டு வருகின்றது. அக்கதை வருமாறு,

“தாழையூரைச் சேர்ந்த பிள்ளையான் கிருஷ்ண பிள்ளை எனும் சமுதாயத் தொண்டாளரின் கனவில், தற்போது ஆலயம் இருக்கும் இடத்தில் ஒரு இலிங்கம் தோன்றியிருந்ததாகவும், அவ்லிங்கத்திற்கு அயலார் பால் ஊற்றி பத்தியுடன் போற்றிப் பரவி நிற்க, அயலில் விளையாடிக் கொண்டிருந்த சிறார்களைக் கொண்டு, பச்சை தென்னையோலை வெட்டி வரச் சொல்லி, அருகில் உள்ள பெண்களைக் கொண்டு, கிடுகுகள் இளைத்து மரத்தடிகளால் கோயில் கட்டி வழிபாடு புரிவதாக கனவில் காட்சியுற்றார். காலையில் தெளிவுற்ற அப்பெரியார் தான் கண்ட கனவை மனைவி, மக்கள், அயலவர்களிடம் சொல்லி, அவ்விடத்தில் சிவனுக்கு கோயில் கட்டி பாலால் திருமஞ்சனம் செய்து வழிபட்டு வந்தனராம்”

இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமானுக்கு பசும்பால் உவப்பானது என்ற காரணத்தினாலும், பத்தர்களும் சிவலிங்கத்தின் மீது பால் ஊற்றி வழிபடுகின்ற காரணத்தினாலும் இறைவன் “பாலீசுவரர்” என்று திருப்பெயர் கொண்டு விளங்குகின்றார். கன்றைக் கண்டவுடன் தாய்ப்பசு தன் மடியில் பாலை இயல்பாகச் சுரந்து கொடுப்பது போல,



பாலீசுவரப் பெருமானும் தன்னை நாடி வந்து வழிபடும் அடியார்களுக்கு பால் போல அருளைச் சுரந்து நல்குகின்றார்.

இவ்வாறு பத்தர்கள் சிவலிங்கத்தின் மீது பால் ஊற்றி வழிபடுகின்றமைக்கும் இவ்வூரார் ஒரு செவிவழி மரபுக் கதை கூறுகின்றனர். இக் கோயிலுக்கு ஒருமுறை யாரும் இதுவரை கண்டிராத ஒரு சாது உறங்கிக் கொண்டிருந்த போது அவரை ஊரார் விசாரிக்க, அவர் எவ்வித பதிலும் கூறாமல், ஆறும், கடலும் கலக்கும் இடத்திலிருந்து ஒரு கல்லைக் கொண்டு வாருங்கள். அக்கல்லை இவ் இடத்தில் வைத்து நீர் ஊற்றி வழிபடுங்கள் நீங்கள் கேட்கும் பாக்கியம் கிட்டும் என்று வாக்குக் கூறி மறைந்து விட்டதாகவும் சொல்லுகின்றனர்.



சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு

அச்சாதுவின் வாக்குக்கமைய பொதுமக்களும் அவர் குறிப்பிட்ட இடத்திலிருந்து ஓர் சிவலிங்கம் போன்ற உருளைக் கல்லை நிலைப்படுத்தி, வழிபட்டு வந்துள்ளனர். தற்போது இவ் ஆலயம் குடமுழுக்கு கண்டு இருப்பதனால், கருவறைக்குள் சிற்பவிதி முறைப்படி அமைந்த சிவலிங்கம் பாலீசுவரராக அருள் புரிய, கருவறைக்குப் பின் சாது வாக்குக் கூறியதன் பயனாக அமைந்த உருளைச் சிவலிங்கத்தை பத்தர்கள் நீர் ஊற்றி வழிபட்டு வருகின்றனர். இவ்வாறு இச் சிவலிங்கப்



பெருமானுக்கு நேர்த்தி வைத்து, நீர் ஊற்றி வழிபட்டால் குழந்தை பாக்கியம் இல்லாதவர்களுக்கு குழந்தைப் பேறும், தீராத நோய்களால் பீடிக்கப்பட்டவர்கள் குணமடைவதாகவும் நம்பிக்கை.

### திருக்கோயில்ச் சிறப்பும், பூசைகளும்

இவ் ஆலயம் 1981ஆம் ஆண்டு ஆனித் திங்கள் 24 ஆம் நாள் முதல் முதலாக திருக்குடமுழுக்கு கண்டது. பின்பு முன்னைய ஆலயத்தை விட பல திருப்பணிகள் கண்டு, புதுப்பொலிவுடன் 2019ஆம் ஆண்டு இரண்டவது தடவையாக குடமுழுக்கு கண்டுள்ளது. ஆலய வளாகத்தினுள் பிள்ளையார், பைரவர், சண்டேசுவரர், நாகதம்பிரான் ஆகியோருக்கு தனித்தனி சந்நிதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இத்திருக்கோயிலில் பங்குனி உத்தரம் நன்னாளில் தீர்த்தத்திருவிழா சிறப்பாக நடைபெறும். கொடியேற்றம் முதல் பூ அர்ச்சனைத் திருவிழா, திருவிளக்குப் பூசை, திருமுறைப் பாராயணம், கற்பூரச்சட்டி திருவிழா, மாம்பழத் திருவிழா, வேட்டைத் திருவிழா, சப்பரத் திருவிழா, தேர்த் திருவிழா என ஒன்பது நாள் திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன. இவை தவிர சிவனுக்குரிய சிறப்பான விரத வழிபாடான கழுவாய் வழிபாடு (பிரதோசம்), அதிகமான பத்தர்களால் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. தைப்பூசம், சிவனிரவு, வருடப்பிறப்பு, ஒன்பானிரவு (நவராத்திரி), திருவாதிரை, திருவெம்பாவை ஓதுதல் போன்ற விசேட தினங்களில் சிறப்பான பூசைகள் நடைபெற்று வருகின்றன.



**ஆலமே அமுதம் ஆக உண்டு வானவர்க்கு அளித்துக்**
**காலனை மார்க் கண்டர்க்காக காய்ந்தனை அடியேற்கு இன்று**
**ஞாலம் நின் புகழே ஆக வேண்டும் நான் மறைகள் ஏத்தும்**
**சீலமே ஆலவாயில் சிவபெருமானே என்றார். - திருப்புராணம்.**

**திருச்சிற்றம்பலம்**

# தென்னாட்டு நிகழ்வுகள்



கடையிற் சுவாமிகள் குருபூசை (08-10-2022)



ஐப்பசித் தேய்பிறை கழுவாய் வழிபாடு (22-10-2022)



புரட்டாசி நிறைமதி வழிபாடு (10-10-2022)



புரட்டாசித் திங்கள் வளர்பிறை கழுவாய் வழிபாடு (08-10-2022)



புதுமனைப் புகுவிழா செந்தமிழ் வழிபாடுகள் (08-10-2022)

தென்னாடு செந்தமிழாகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் இருபத்து ஆறாவது திங்கள் செய்தியிதழ் "தென்னாடு", சிவத்திரு.சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு துலை நல்லோரை ஐப்பசித் திங்கள் 21ம் நாள் நிறைமதி அன்று (07-11-2022 திங்கட்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி , தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம். சைவ மாணவர் சபை பதிவு இலக்கம் - HA/4/JA/343.

தொலைபேசி +94 21 221 2739 | புலனம் +94 (70) 770 1111| மின்னஞ்சல் thennavan@thennadu.org | fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org